விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka






# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 138 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 22 ஞாயிற்றுக்கிழமை (05.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நீதிமன்ற நடமாடும் சேவைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஒன்லைன் ஊடாக சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் வகையில், நீதிமன்ற 19

### எதிர்வரும் 15ஆம் திகதி
## பாராளுமன்றம் கலைக்கப்படும்?
### தென்னிலங்கை ஊடகங்களின் செய்தியால் பரபரப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 15ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படும் சில தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திகளால் இலங்கை அரசியல் களத்தில் பரபரப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால், ஜூன் இரண்டாம் வாரம் வரை தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படாது என அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய மின்சாரச் சட்டத்தை ஜூன் முதல் வாரத்தில் நிறைவேற்ற 04

### சிறு குற்றங்களுக்கு வீட்டுக் காவல்
## நீதி அமைச்சர்

(கொழும்பு)

சிறு குற்றங்களில் ஈடுபடும் நபர்களை வீட்டுக் காவலில் வைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ 19

## யாழில் சர்வதேச சிலம்பம் போட்டி



(யாழ்ப்பாணம்)

ஐந்து நாடுகள் பங்குபற்றும் சர்வதேச சிலம்பம் போட்டியானது நேற்று யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகியது. 19

### இந்தியாவிலிருந்து இலங்கைக்கு
# நிலத்தடி குழாய்கள் மூலம் எண்ணெய்
### இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா



(திருகோணமலை)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நிலத்தடி குழாய்கள் மூலமாக எண்ணெய் வழங்கும் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் ஒன்றிணைந்து 02

## இரு பிள்ளைகளின் தாய்
### தெல்லிப்பழையில் சடலமாக மீட்பு
### மகன் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில் இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் இறந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ஜோன் வெஸ்டஸ் கெனடி ஜெஸ்மின் (வயது-36) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் 19

## இலங்கையின் நல்லிணக்கத்துக்கு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பு
### ஜனாதிபதியிடம் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

இலங்கையின் தேசிய நல்லிணக்கத்துக்கு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைக்கும் என ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்துள்ளார். 19

## ரணில் இன்னும் எம்மிடம் ஆதரவு கோரவில்லை
### நாமலுக்கு காலம் உள்ளது
### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மகிந்த



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட பெரமுனவின் ஆதரவை ரணில் இன்னும் கோரவில்லை எனத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் 19

## என்னைச் சிறையில் அடைக்க ஆளுந்தரப்பினர் முயற்சி
### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

என்னைச் சிறையில் அடைக்கச் சகல வழிகளிலும் ஆளுந் தரப்பினர் முயல்கின்றனர். சிறையில் அடைக்கும் அளவுக்கு நான் குற்றம் எதுவும் செய்யவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆட்சி மலரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால 19

### சித்திரவதைக்கு உள்ளாக்கும் முகமாக
## யாழில் மாடுகளை ஏற்றி சென்ற லொறி சாரதி கைது




(யாழ்ப்பாணம்)

சித்திரவதைக்கு உள்ளாக்கும் முகமாக யாழில் மாடுகளை லொறியில் ஏற்றிச் சென்ற சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் 10 மாடுகளையும் மீட் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



J/396 அல்வாய் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு **இராசையா எழில்ரமணா** அவர்களுடைய அன்புத் தந்தையார்

அமரர்

## சீனியர் இராசையா


அவர்கள் 01.05.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 25.12.1944 மறைவு 01.05.2024

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-0277)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத் திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு **வ.கொங்காதரன்** அவர்களுடைய அன்புத் தந்தையார்

அமரர்

## சின்னத்தம்பி வல்லிபுரம்

அவர்கள் 02.05.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-0276)

தோற்றம் 30.04.1936 மறைவு 02.05.2024

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## மனோன்மணி நற்குணராசா



மலர்வு 02.06.1938 உதிர்வு 01.05.2024

முல்லைத்தீவு தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட மனோன்மணி நற்குணராசா அவர்கள் 01.05.2024 (புதன்கிழமை)அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நற்குணராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - நாகம்மா தம்பதியினரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, கணபதிப்பிள்ளை மற்றும் செல்வராசாவின்(ஸ்ரார் ஜீவல்லறி, புத்தளம்)அன்புச் சகோதரியும் இந்திரமலர், சற்குணதேவி, பராசக்தியின் அன்பு மைத்துனியும் வாசுகி (பிரான்ஸ்), தேவகி (பிரான்ஸ்), சங்கர் (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), முரளி (பிரான்ஸ்), றெஜீந்திரன் (லண்டன்), விபுலன் (ஆசிரியர் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), அகிலன் (ஆசிரியர்- யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), நவறஞ்ஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கைலையன்கிரிவாசன் (பிரான்ஸ்), அமரர் சுந்தரலிங்கம் (பிரான்ஸ்) மற்றும் சறோஜினிதேவி (பிரான்ஸ்), சிறிரவீந்திரன் (பிரான்ஸ்), தவச்செல்வி (பிரான்ஸ்), குமுதறஜனி (லண்டன்), பிரதீபா (விரிவுரையாளர்- புவியியற்துறை யாழ் பல்கலைக்கழகம்), அருள்மதி (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, சாருஜா, ஜெனுசன், சுகிர்சன், அபிவருணன், அபிஷன், அனிஷன், அஷ்விந்தன், துஷிந்தா, சோபிகா, நிருஷா, வேதிகா, அன்றியா, யொசுவா, வெர்ஜினி, றெமி, ஐஸ்வரியன், அம்ஷவி, அக்ஷிகா, அஷ்விதன், ரிஷிகா, ஆருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜலீன், அலிஷாவின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (05.05.2024) இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**மீசாலை வடக்கு, கொடிகாமம்.**

**077 495 2024**
**071 861 7949**

*தகவல்:* குடும்பத்தினர்

## நிலத்தடி...

நேற்று திருகோணமலை இந்தியன் எண்ணை நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தை திறந்து வைத்தனர்.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து நிலத்தடி குழாய்கள் மூலம் எண்ணெய் வழங்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் இது தொடர்பில் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.(ம-7,10)

# குத்தகைக்கு உண்டு

## யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாக

ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள எமது சங்க கட்டிட தொகுதியில் 2ம் மாடியில் 3000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் நீண்ட கால குத்தகைக்கு விடப்படும். இக்கட்டிடத்தில் ரியூட்டரிகள், பயிற்சி நிலையங்கள், தங்குமிட வசதிகள், தனியார் வைத்தியசாலைகள் போன்ற தேவைக்கு ஏற்றவாறு வடிவமைக்கக் கூடியது. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(C-0275)

**யாழ் மாவட்ட பேக்கரி, உரிமையாளர் சங்கம், 183 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

**செயலாளர்**
**021 222 3814**
**077 665 3323**

## இரத்ததான முகாம்

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியினருடன் இணைந்து நடாத்தும் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று காலை 08.30 மணி முதல் மாலை 03.30 மணி வரை இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ம)

# காணி விற்பனைக்கு

**சாவகச்சேரி நகர மத்தியில் காணியுடன் மூன்று அறைகள் கொண்ட வீடுகள் இரண்டும், மூன்று கடைகளும் விலை மாற்றத்துடன் விற்பனைக்கு உண்டு.**

(663)

**0770 780 240**

# வீடு விற்பனைக்கு

அச்சுவேலி கதிரிப்பாயில் 5 பரப்புக் காணியில் 1500 கோழி வளர்க்கக் கூடிய கோழிப் பண்ணை, பயன்தரு மரங்கள் மற்றும் நன்னீர் கிணறுடன் கூடிய 60 அடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

(647)

**077 934 6557**

# நாகபூஷணி திருமண சேவை

## 50% கட்டணக் கழிவு

**(05.05.2024 முதல் 15.05.2024 வரை)** பல்லாயிரக் கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து நீங்கள் விரும்பும் மணமக்களை மிக துரிதமாக திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.


**10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

(யாழ் வேம்படிச் சந்திக்கு அருகில் **BCAS Campus** க்கு பக்கத்து லேன்)

(657)

**021 222 9306,077 138 7596,071 999 9306**

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 05.04.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

## அமரர் பூதத்தம்பி குமரகுரு (கிளி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 06.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அஸ்தியானது கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**கரவத்தனை, கம்பர்மலை, வல்வெட்டித்துறை.**

(0042)

*இங்ஙனம் :*
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய மக்களுக்கான இலவச அரிசி

# வாக்காளர்களுக்கான இலஞ்சமா?

## பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

**வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதற்காக அரசாங்கம் அரச சொத்துக்களைப் பயன்படுத்து கின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.**

தேர்தல்களிற்கு இன்னமும் சில மாதங்களே இருக்கையில் அரசாங்கம் அரசசொத்துக்களை தவறாகப் பயன்படுத்துகின்றது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது என தெரிவித்துள்ள அவர் வறிய மக்களிற்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தினால் வரி செலுத்துவோரின் மில்லியன் கணக்கான பணம் வீணடிக்கப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ஒவ்வொரு உள்ளூராட்சி பகுதிக்கும் அரசாங்கம் 10 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. மாகாண ஆளுநரின் விருப்பத்தின்படி இந்த நிதி பயன்படுத்தப்படும். ஆளுநர் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதி என தெரிவித்துள்ள ரோகண ஹெட்டியாராச்சி இது ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்ட நடவடிக்கை என்பது வெளிப்படையான விடயம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜூலை 31ஆம் திகதிக்குள் இந்த திட்டங்களை பூர்த்திசெய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார், ஒகஸ்டில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகும் இதன் காரணமாகவே அரசாங்கம் ஜூலை 31 ஆம் திகதிக்குள் இந்தத் திட்டங்களை பூர்த்தி செய்ய விரும்புகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)



# செஹான் சேமசிங்க - லியோ மின் ஆகியோருக்கு இடையே சந்திப்பு



(கொழும்பு)

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மற்றும் சீனாவின் துணை நிதியமைச்சர் லியோமின்ஆகியோருக்கு இடையே சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57ஆவது வருடாந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஜோர்ஜியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் ஒரு பகுதியாக குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு சீனா முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என அந்நாட்டு துணை நிதியமைச்சர் குறிப்பிட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறியுள்ளார். (நி - 6)


# இலங்கை வந்தடைந்தார் ஜப்பானிய அமைச்சர்



(கொழும்பு)

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார். (நி -6)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 - 08 - 1948 | 03 - 05 - 2024 |

## திருமதி.வல்லிபுரநாதர் சரோஜினிதேவி

மயிலியாவளவு கரணவாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரநாதர் சரோஜினிதேவி கடந்த 03.05.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தெய்வநாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரநாதர் அவர்களின் அன்பு மனைவியும், சுதர்சினி (சுவிஸ்), யோகச்சந்திரன் (கனடா), மஞ்சுளா (ஆசிரியை, யா/பொற்பதி றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும், பாலேந்திரன் (சுவிஸ்), அஜந்தா (கனடா), தனராஜ் (ஆசிரியர் யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், குமாரசாமி(கனடா), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, சகுந்தலாதேவி, சந்திராதேவி, பாலசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற நகுலன் ஆகியோரின் அன்பு சகோதரியும், ஷாரா (சுவிஸ்), ஷாம் (சுவிஸ்), மேகனா (கனடா) , அக்ஷனா (கனடா), ஜனிஷ்கா, ஜஷிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 06.05.2024 நாளை திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக காலை 10 மணியளவில் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"நாதன் வாசா"
கரணவாய்,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்
(652) [illegible]

## வழித்தட அனுமதி இல்லாத பேருந்துகளுக்கு

# ஐந்து லட்சம் ரூபாய் அபராதம் விதிக்க தீர்மானம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

வீதி அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துக்களுக்கான அபராதத்தை 5 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கான வரைவுத் திட்டம் போக்குவரத்து அமைச்சினால் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

3,200 தொலைதூர சேவை பேருந்துகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஒழுங்கு முறையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், பயணிகள் பெரும்பாலும் வீதி அனுமதிப் பத்திரம் இல்லாத பேருந்துகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர்

அவ்வாறான பல பேருந்துகளின் சாரதிகளைக் கைது செய்து வழக்குத் தொடர தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்படும் பேருந்து சாரதிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்து ள்ளது. (நி-6)

# மசகு எண்ணெயின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 78.11 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 82.96 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.14 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 1950 . 02 . 10

மறைவு 2024 . 05 . 04

## திருமதி கந்தையா பாலஈஸ்வரி

கந்தையா பாலஈஸ்வரி அவர்கள் நேற்று (04.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் போடிங்றோட், புலோலி மத்தி, பருத்தித்துறையைச் சேர்ந்த அமரர் கார்த்திகேசு - தங்கம்மாவின் மகளும் அமரர் வைரமுத்து - கந்தையாவின் அன்பு மனைவியும் அமரர் கார்த்திகேசு பாலசுப்பிரமணியம், அமரர் கார்த்திகேசு பாலகிருஸ்ணன், அமரர் பொன்னுத்துரை பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சங்கர் தினேஸ் துர்க்காவின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2024) நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

(C-0279) தொ.இ : 077 844 9059

### பாராளு...

வேண்டும் என்பதால் அதற்கு முன் எக்காரணம் கொண்டும் பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன் பின்னரே எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதற்கான அறிவிப்புகள் வெளியாகும். என்றாலும், முன்கூட்டியே பாராளுமன்றத் தேர்தல் நடத்துவது குறித்து அரசாங்கம் இதுவரை எவ்விதக் கலந்துரையாடல்களையும் நடத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


உடல் எடை குறைய வேண்டுமா?
◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
பால்மா குளிசை - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.
தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப் பாவித்து பயனடைய
உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?
எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு
கருமை நிறம் நீங்க வேண்டுமா?
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம். 077 210 6155
(660)

BAHAWATHI MOTORS
Management Assistant
(முகாமைத்துவ உதவியாளர்)
கல்வித் தகைமை
O/L, A/L முடித்தவர்கள், முகாமைத்துவ அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
Walking Interview
06.04.2024 திங்கள் - 10 AM - 2.00 PM



நல்லூர், பெருமாள் கோவில்,
யாழ்ப்பாணம்.
அருகாமையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது
BAHAWATHI MOTORS
351, CLOCK ROAD, JAFFNA.
077 877 4496, 077 044 4496
(661)

# மரண அறிவித்தல்



மலர்வு : 06.06.1955 | உதிர்வு : 02.05.2024

## செல்லையா செல்வரத்தினம்

யாழ்.பருத்தித்துறை, முருகன் கோவிலடி புலோலி வட மேற்கை பிறப்பிடமாகவும் கூவில் புலோலி தென்மேற்கு புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வரத்தினம் அவர்கள் கடந்த 02.05.2024 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு இளைய மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும் அனுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவைகள் திணைக்களம், கரவெட்டி), அனுராதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச சபை பருத்தித்துறை), ரேவதி, கஜமுகன் (லண்டன்), கஜந்தன் (நடத்துநர் - சிற்றூர்தி சேவை சங்கம், பருத்தித்துறை - 750, 751) ஆகியோரின் பாமிகு தந்தையும் சிவகுமார் (உரிமையாளர் - தன்சி உணவகம், கிளிநொச்சி), ராஜ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், மருதங்கேணி), அருள்நந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனகரத்தினம், தவரத்தினம் (கனடா), யோகேந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவஞானம் (கனடா), அமரர் தெய்வேந்திரம், சிவகுமார், செல்வமணி, திலகசுந்தரி, சிதம்பரநாதன் (லண்டன்), திருச்செல்வம் (லண்டன்), அமிர்தசாகரன் (லண்டன்), வித்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிசன், சஜித், தன்சி, சஞ்சீவ், ரேஸ்மன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2024) ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணியளவில் மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கூவில், புலோலி
தென்மேற்கு, புலோலி.

(C-0278)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025



**செவ்வாயை இராசிநாதனாகக் கொண்ட மேஷ இராசி அன்பர்களே!**

நீங்கள் கம்பீரமான தோற்றத்தை கொண்டவர்கள். பரந்த மனப்பான்மை உடையவர்கள். கிரகநிலை - இராசி ஸ்தானத்தில் இருந்து தனவாக்கு ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது ரண ருண ரோக ஸ்தானம் - அஷ்டம ஆயுள் ஸ்தானம் - தொழில் ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீகுரோதி வருடம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கில திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுபநாமயோகமும் - பவ கரணமும் - சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை 28.22-இற்கு - மாலை 05.01 இற்கு துலாம் லக்னத்தில் குருபகவான் மேஷ இராசியிலிருந்து ரிஷப இராசிக்கு மாறுகிறார்.

## உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும்

**மேஷம் இராசியினருக்கான குரு பெயர்ச்சி பலன்கள்**

இந்த குரு பெயர்ச்சியால் குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்தி மகிழ்வீர்கள். உங்களின் சுய முயற்சியினால் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். அதிக வேகமில்லாமல் நிதானமாகவும், பொறு ப்புடனும் காரியமாற்றுவீர்கள். உங்களின் புத்திசாலித்தனம் அதிகரிக்கும். தெய்வ வழிபாடுகளில் மனம் ஈடுபடும். வீண் அபவாதங்களிலிருந்து விடுபடு வீர்கள். சிலருக்கு வீடு மாற்றம், இட மாற்றம் ஆகியவை நடக்கும். உங்களின் இரக்க குணத்தால் மற்றவர்களுக்கு உதவி செய்வீர்கள். அதேநேரம் சிலருக்கு முழங்கால் வலி, மூட்டு வலி ஆகியவை ஏற்படலாம். தாயார் வழி உறவுகள் சீராகும். உங்களுக்கு எதிராக கலகம் செய்தவர்கள் அடங்குவார்கள்.

வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். சிலருக்கு தலைமைப் பொறுப்புகள் கிடைக்கும். முக்கியமான பூசைகள், ஹோமங்களை இல்லத்தில் நடத்துவீர்கள். அசையாச் சொத்துகளால் வருமானம் வரத்தொடங்கும். வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும். உங்களின் முகத்தில் வசீகரம் உண்டாகும். பிறரைக் கவரும் வகையில் பேச்சுத் திறமை அதிகரிக்கும். குடும்பத்தினருடன் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். கல்வி, கேள்விகளில் அரிய சாதனைகளைச் செய்யும் ஆற்றலைப் பெறுவீர்கள். உங்களுக்குக் கீழ்பணிபுரிபவர்களுக்கு தக்க அறிவுகளை வழங்கி அவர்களை உங்களுக்கு ஆதரவாக்கிக் கொள்வீர்கள்.

உத்யோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரித்தாலும் சக ஊழியர்களின் உதவியால் வேலைகளைக் குறித்த காலத்திற்குள் முடித்துவிடுவீர்கள். மேலதிகாரிகள் உங்களின் கோரிக்கைகளை உணர்வு பூர்வமாக பரிசீலித்து உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுப்பார்கள். வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகள் நீங்கும். இலாபம் பெருகும். கூட்டாளிகளின் ஒத்துழைப்பைப் பெற்று செயற்பட்டால் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். அரசியல்வாதிகள் அனைவரையும் அனுசரித்து நடந்து கொள்ளவும். கட்சிமேலிடத்திடம் உங்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். அரசு அதிகாரிகளால் உங்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். எதிரிகளை இனம்கண்டு ஒதுக்குவீர்கள்.

கலைத்துறையினரின் முயற்சிகள் வெற்றி பெறும். அதனால் புகழைத் தக்க வைத்துக்கொள்வீர்கள். உங்கள் படைப்புகளை புதிய வடிவத்தில் தருவீர்கள். பெண்மணிகள் கணவருடன் விட்டுக் கொடுத்துப் பழகுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி நிறையும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆன்மீக சுற்றுலா சென்று வருவீர்கள். பிறரிடம் பேசும் நேரத்தில் நிதானம் தேவை. மாணவமணிகள் கல்வியில் எதிர்பார்த்த மதிப் பெண்களைப் பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவுடன் வெளி விளையாட்டுகளில் ஈடுபட்டு வெற்றியடைவீர்கள். ஆசிரியர்களின் ஆதரவும் நன்றாக இருக்கும். அதேநேரம் புதிய நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம்.




**அஸ்வினி:** இந்த குரு பெயர்ச்சியின் மூலம் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். பண வரவுக்குக் குறைவு ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை உயரும். வாழ்க்கையில் முன்னேற வேகம் காட்டுவது நல்லது. மனக்குழப்பம் நீங்கும். தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடன் காரியங்களில் ஈடுபடுவீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக்கவலை குறையும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப்பெறுவீர்கள். சற்று கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது. திடீர் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். எந்தக் காரியத்தையும் யோசித்து செய்வது நன்மை தரும்.

**பரணி:** இந்த குரு பெயர்ச்சியின் மூலம் எல்லா காரியங்களிலும் அதிக கவனம் உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டிவரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்**

இந்தக் குரு பெயர்ச்சியின் மூலம் பிள்ளைகள் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பாராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். அதனால் வெளியூர் பயணங்களைத் தள்ளிப்போடுவது நல்லது. கணவனின் உடல்நலத்தில் கவனம் தேவை. உங்கள் புத்திக் கூர்மை உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். வியாபாரிகள் போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித்தாலும் பொறுமையுடன் செயற்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள். உங்களின் சமயோஜித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்வீர்கள்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமை தோறும் முருகனை தரிசித்து வணங்க எல்லா துன்பங்களும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்;

**சிறப்பு பரிகாரம்:** அரளிப்பூவை வாங்கி மாலையாக கட்டி அருகிலிருக்கும் முருகன் கோவிலில் உள்ள வேலுக்கு சாத்தி அர்ச்சனை செய்து வணங்கவும்;

**சொல்ல வேண்டிய மந்திரம்:**

"ஓம் சரவணபவ" என்ற மந்திரத்தை தினமும் 6 முறை சொல்லவும்

**அதிஷ்ட எண்கள்:** 1, 3, 9

**அதிஷ்ட ஹோரைகள்:** சூரியன், செவ்வாய், குரு

**அதிஷ்ட திசைகள்:** கிழக்கு, தெற்கு

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வியாழன்

(தொடரும்)

# இராசிபலன்

05.05. 2024
சித்திரை 22, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி பிற்பகல் 3.49 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 6.17 மணிவரை
சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26-5.56 மணிவரை
பிரதோச விரதம்
சந்திராஷ்டமம் - பூசம், ஆயிலியம்

**வளவன்**




குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் சந்தோசம் காணவேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறலாம்.




எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.




சில பிரச்சினைகளை கண்டும் காணமலும் இருப்பது நல்லது, காரிய செயற்பாடுகளுக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மருத்துவச்செலவுகள் ஏற்படலாம்.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும், பொறுமையால் பெருமைகள் வந்து சேரும்.,




கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான நாள்.




ஒளிமயமான எதிர்காலத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், விருந்து பசாரத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.




உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும்.




எதிர்பார்ப்புக்கள் நிறைவு பெறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.




எதிர்பார்த்த காரியம் ஒன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

நீ புகழை [illegible] புகழ் உன்னைத் தேடி வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறக்குறியீடுகள் பதிவிடாத இனிப்பு வகை மீட்பு

### விநியோகஸ்தருக்கு தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைக் கோட்டை பகுதியில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான இனிப்பு வகைகள் கைப்பற்றப்பட்டு ஒரு லட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

ஆனைக் கோட்டைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு.பாலேந்திரகுமார் மற்றும் கி.அஜந்தன் தலைமையில் பல வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது முறையான விதத்தில் இறக்குமதி செய்யப்படாத மற்றும் நிறக் குறியீடுகள், சுட்டுத்துண்டுகள் இல்லாத வெளிநாட்டு பிஸ்கட் மற்றும் சொக்கலேற் வகைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பொருட்கள் தொடர்பில் இறக்குமதியாளர்களிற்கும் விநியோகஸ்தர்களிற்கும் எதிராக கடந்த வியாழக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கினை விசாரித்த நீதவான், அவர்களுக்கு கடும் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன்ஒருலட்சம்ரூபாதண்டமாக அறவிடுமாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## யாழில் சட்டவிரோத கொல்களம் பொலிஸாரால் முற்றுகை

❖ ஒருவர் கைது

❖ 21 மாடுகள், 4 ஆடுகள் உயிருடன் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் சட்ட விரோத கொல்களம் ஒன்று பொலிஸாரினால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு, 21 மாடுகள் 4 ஆடுகள் மற்றும் ஒரு தொகை இறைச்சியும் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.நகர்ப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாடு , ஆடுகள் இறைச்சியாக்கப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவல்களை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவ்விடத்தை சுற்றிவளைத்தனர்.

அதன்போது குறித்த கட்டடத்தில் இறைச்சியாக்கிக் கொண்டிருந்த நபரை கைது செய்ததுடன், இறைச்சிக்காக கொண்டு வரப்பட்டிருந்த 21 மாடுகள் மற்றும் 4 ஆடுகளை உயிருடன் மீட்டுள்ளதுடன், ஒரு தொகை இறைச்சி மற்றும் இறைச்சியாக்க பயன்படுத்திய கோடாரி, கத்திகள் உள்ளிட்டவற்றையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் யாழில் பல இடங்களில் ஆடு, மாடுகள் கடத்தப்படுவதாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் உள்ள நிலையில், உயிருடன் மீட்கப்பட்ட ஆடுகள், மாடுகள் களவாடப்பட்டவையா, என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

## துப்பாக்கி பிரயோகம் ஒருவர் காயம்

(கொழும்பு)

வாத்துவ பகுதியில் நேற்று மதியம் மொல்லி கொட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன் பாக துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

## மாணவி துஷ்பிரயோகம் சந்தேகநபர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரியைச் சேர்ந்த 15 வயதான பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சந்தேகத்தின் பேரில் வரணிப் பகுதியைச் சேர்ந்த 21வயதான இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாடசாலைக்குச் சென்ற 15 வயதான சிறுமி வீடு திரும்பவில்லை என சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சிறுமியை வரணிப் பகுதியைச் சேர்ந்த 21வயதான இளைஞன் அழைத்துச் சென்றிருந்தது தெரிய வந்துள்ளது.

அதன் பின் னர் சிறுமியை மீட்டு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் அடிப்படையில் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மேற்படி சந்தேக நபரான 21 வயதான இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் கீரிமலை சிவானந்தா வி.கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட "யாழின் துருவம்" கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட தொடர். குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நவாலி சென்பீற்றர்ஸ் அணியை எதிர்த்து தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகமும் 4.45 மணிக்கு குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியை எதிர்த்து அராலி திருமகள் அணியும் மோதவுள்ளன. (நி-6-90)

## மனித உரிமை டிப்ளோமா கற்கை நெறிக்கான தலைமைத்துவ பயிற்சி

(சாவகச்சேரி)

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இலவசமாக பயிற்றுவிக்கப்படும் மனித உரிமைகள் டிப்ளோமா கற்கையை பயிலும் மாணவர்களுக்கு மூன்று நாட்கள் தலைமைத்துவ மற்றும் உள ஆற்றுப்படுத்தல் பயிற்சிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற வதிவிட தலைமைத்துவ மற்றும் உள ஆற்றுப்படுத்தல் பயிற்சியானது அண்மையில் பண்டத்தரிப்பு இறை தியான இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது உள ஆற்றுப்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறிகளை விரிவுரையாளர் புஸ்பகாந்தன் மற்றும் அருட்தந்தை நிர்மல் சுரஞ்சன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

மேலும் உடற்பயிற்சி, தற்காப்பு பயிற்சி ஆகியனவும் மனித உரிமைகள் கற்கை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டதுடன் வதிவிட பயிற்சியின் இறுதியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## சைவப்புலவர் பரீட்சை இம் மாதம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2024 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 24, 25,26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு உரைநடை, பிற்பகல் 2 மணிக்கு வரலாறு, 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலக்கியம், பிற்பகல் 2 மணிக்கு இலக்கணம், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாத்திரம் ஆகிய பாடங்கள் இடம்பெறவுள்ளன.

பரீட்சைகள் யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு ஆணைப்பந்தி இந்து மகளீர் கல்லூரி. ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இருவாரங்களில் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அகில் இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-6)

## வீதியோரங்களில் மருத்துவக் கழிவுகள் சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி ஓரங்களில் மருத்துவக்கழிவுகள் உட்பட பொலித்தீன் கழிவுகள் முறையற்றவிதமாக கொட்டப்பட்டுள்ளமை சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தியுள்ளது.



வீதி ஓரங்களில் பொலித்தீன் பைகளால் சுற்றப்பட்டு பாரிய அளவு குப்பைகள் வீதி ஓரங்களில் பல்வேறு இடங்களில் கொட்டப்பட்டுள்ள நிலையில் அவை காற்று காரணமாக முழுப் பகுதியிலும் நிறைந்து காணப்படுவதுடன் மிருகங்களும் அவற்றை உண்ணும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் குப்பைகளை கொட்டும் நபர்களுக்கு எதிராக பிரதேச சபை மற்றும் சுகாதார ஊழியர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

(நி-6-285)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 439
Viber 076 636 3378



# தமிழர்களின் நம்பிக்கையை உடைத்த எரிக் சொல்ஹெய்ம்

**வன்னிப் பெரு நிலப்பரப்பில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் கொத்துக் கொத்தாய் மடிந்தபோது சிறு கண்டணத்தைக் கூட பதிவு செய்யாத எரிக் சொல்ஹெய்மின் செயல் தமிழ் மக்களை பெரிதும் காயப்படுத்தியது.**



இலங்கை அரசாங்கத்திற்கும் -தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு வார்த்தை நடைபெற்ற காலத்தில் எரிக் சொல்ஹெய்ம் மிகப் பிரபல்யம் பெற்றவராக இருந்தார்.

அவர் இலங்கைக்கு விஜயம் செய்தால் இலங்கை ஊடகங்களில் பிரதான செய்தியாக அவரின் வருகை இடம் பெறும் அளவில் நிலை இருந்தது.

அன்று ஏப்ரல் 1. யாழ்ப்பாண பத்திரிகை ஒன்றின் முன்பக்கத்தில் கட்டமிடப்பட்ட செய்தி. "இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதான பேச்சுவார்த்தை தூதுவராக இருந்துவரும் எரிக் சொல்ஹெய்ம் தனது பதவியை இராஜினாமா செய்தார்."

அச் செய்தியின் கீழ், அன்பு வாசகர்களே இன்று ஏப்ரல் 1. முட்டாள்கள் தினம். உங்களை யாரும் முட்டாள் ஆக்க முயற்சிப்பார்கள் அவதானமாக இருங்கள் என்றிருந்தது.

எரிக் சொல்ஹெய்மின் முக்கியத்துவத்தை கூறுவதற்கு இதைவிட ஒரு உதாரணத்தை கூறி விட முடியாது.

அந்தளவிற்கு அவர் தனது சொந்த நாடான நோர்வேயில் கூட புகழடைந்திருக்க மாட்டார்.

இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர் உச்சம் பெற்ற காலம்.

இலங்கையில் நிலவும் உள்நாட்டுப் போரை நிறுத்தியே ஆக வேண்டும் என சர்வதேசம் விரும்பியது.

அந்த விருப்பம் சிங்கள அரசிற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சு வார்த்தையாய் மலர்ந்தது.

குறித்த பேச்சு வார்த்தைக்கு நோர்வே மத்தியஸ்தம் வகித்தது.

நோர்வேயின் விசேட சமாதான தூதுவராக எரிக்சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து பலதரப்பட்ட சுற்றுக்களாக வெளி நாடுகளில் பேச்சவார்த்தை நடைபெற்றது.

இச் செயற்பாட்டில் மிகத் தீவிரமாக செயற்பட்டவர் எரிக் சொல்ஹெய்ம். இதனால் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரியவாராக மாறினார்.

போரின் கொடுமையினால் பல தரப்பட்ட இன்னல்களுக்கு முகம் கொடுத்த தமிழ் மக்களுக்கு போர் நிறுத்த உடன்படிக்கை பெரும் நிம்மதியைக் கொடுத்தது.

அதுவரை எந்தப் பொது நிகழ்வுகளிலும் ஒன்றுகூடாமல் எப்போது விமானம் வரும். தாக்குதல் நடத்தும். எப்போது செல் வந்து வீழ்ந்து வெடிக்கும் எனத் தெரியாமல் அச்சத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் சமாதான காலப்பகுதியில் நிம்மதியை உணர்ந்தார்கள்.

அந்த நிம்மதியைத் தரக் காரணமானவர் எரிக்சொல்ஹொய்ம் என பரிபூரணமாய் நம்பினர். அதனாலோ என்னவோ தமிழ் மக்களுக்கு எரிக்சொல்ஹெய்ம் மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் இருந்தது.

நோர்வே நாடு நடு நிலையுடன் செயற்படுகிறதோ இல்லையோ சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நடு நிலையுடன் செயற் படுவார் என தமிழ் மக்கள் பூரணமாய் நம்பினர்.

அக்காலப் பகுதியில் எரிக்சொல்ஹெய்மின் செயற்பாடுகளும் அவ்வாறே இருந்தது.

காலக் கொடுமை எங்கு பிழை உண்டு என்று சீர் தூக்கிப் பார்ப்பதற்குள் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்தது. இருதரப்பிற்கும் இடையில் போர் வெடித்தது.

ஆயினும் தமிழ் மக்களுக்கு எரிக்சொல்ஹெய்ம் மீதிருந்த மதிப்பும் மரியாதையும் கொஞ்சமும் குறையவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பம் சொல்லி மாறாது. அந்தளவிற்கு உயிர்பலி எடுத்த ஆட்சிக் காலமே அவரின் ஆட்சிக்காலம்.

விடுதலைப் புலிகளை அழிக்கிறேன் என்ற கோசத்துடன் ஆட்சிப் பீடமேறிய மகிந்த ராஜபக்ஷ போரைத் தீவிரமாக்கினார்.

ஏலவே இருந்த ஆட்சியாளர்களின் போர் வீரியத்திலும் பன்மடங்கு வீரியத்தை விடுதலைப் புலிகள் மீது செலுத்தினார் மகிந்த ராஜபக்ஷ.

விடுதலைப் புலிகளுக்கு எதிரியான இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் தயவைப் பெற்ற ராஜபக்ஷக்கள் தாம் நினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டனர்.

போரில் அப்பாவி உயிர்கள் பறிபோவது பற்றி இம்மியும் கலங்காத ராஜபக்ஷக்கள் போரைத் தீவிரப்படுத்தினர்.

2009 இறுதி யுத்தத்தின் அழிவுகளின் மிகக் கொடுமையானது. பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் இறுதி யுத் தத்தில் கொல்லப்பட்டனர்.

இங்கு தான் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரியவரின் நம்பிக்கை தகர்ந்து போனது.

ஆம், இறுதி யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். உடன் போரை நிறுத்துங்கள் என சர்வ தேசத்தின் பல அமைப்புகள் அறிக்கையிடுகின்றன.

ஆயினும் எரிக்சொல்ஹெய்ம் இது தொடர்பில் மூச்சுகூட விடாமல் இருந்து விட்டார்.

இதுவே தமிழர்களின் நம்பிக்கைக்கு கிடைத்த முதல் அடி.

அதன் பின்னர் 2022 ஆம் ஆண்டு மீண்டும் ஓர் அடி தமிழ் மக்களுக்கு வீழ்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச கால நிலை ஆலோசகராக எரிக்சொல்ஹெய்ம் நியமிக்கப் படுகிறார்.

இந்தப் பதவி எனக்கு வேண்டாம் என எரிக்சொல்ஹெய்ம் உதறி எறிவார் என தமிழ் மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கையும் தவிடுபொடியானது.

இதனூடாக எரிக்சொல்ஹெய்மின் மனநிலையை நன்கு புரிந்து கொண்டனர் தமிழ் மக்கள்.

நிலை இதுவாக இருக்கையில் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த எரிக்சொல்ஹெய்ம் தனது யாழ். விஜயம் பற்றி சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை முன்வைத்திருந்தார்.

அதில் "தமிழ் மக்களின் அபிலாசைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை இலங்கை அரசு வழங்க வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடரும். அப்போராட்டம் வன்முறையற்ற போராட்டமாக தொடரும்" எனக் கூறியிருக்கிறார்.

அட கொடுமையே! தமிழ் மக்கள் தங்கள் மீது வைத்திருந்த மதிப்பையும் மரியாதைஙயும் தகர்த்து, நொருக்கி விட்டு. இப்போது இவ்வாறு தெரிவித்திருக்கும் தங்களின் பேச்சுக்குள் இருக்கும் இராஜதந்திரத்தை தமிழ் மக்கள் நன்கறிவர்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்ப் பற்றாளருமான ஈழவேந்தன் அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

பலாலி-கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுநிலை உடற்கல்வி விரிவுரையாளர் கனகசபை யதுகுலசிங் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரமடைகின்றோம்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில இருந்து வவுனியாப் பல்கலைக்கழகம் பிரித்தெடுக்கப்பட்டு விட்டது.

இனி கிளிநொச்சி பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு அதுவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கப்பட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து கிளிநொச்சிப் பல்கலைக் கழகத்தைப் பிரிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். அவ்வாறு பிரித்தால் எங்கள் தமிழ்ப் பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற அளவு கணிசமாகக் குறைந்து விடும்.

ஆகையால் இது விடயத்தில மிகவும் கவனமாக இருங்கள் எண்டு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஒரு பொது அரங்கில பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே இது விடயத்தில எங்கட கல்விச் சமூகம் விழிப்பாக இருக்க வேணும் எண்டதொரு தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம். இவ்வாறு விதானையார் கூற, அனைவரும் அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

**கங்காணி:-** அது சரி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில பேராசிரியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் இனி தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூகவியல் சார் பெறுமானங்கள் அதிகரிக்கும் எண்டும் கொழும்பில நடந்த ஒரு கருத்தரங்கில பங்குபற்றின சிங்களப் பேராசிரியர் ஒருவர் தனது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டதாக அறிந்தன்.

அப்ப தெரியாமல் தான் கேட்கிறன், அந்தச் சிங்களப் பேராசிரியர் கூறியதுபோல யாழ்ப்பாணத்தில பேராசிரியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதால, இனி எங்கட தமிழ் மக்களின் சமூகப் பெறுமானங்களும் அதிகரிக்கும் தானே!.

**வாத்தியார்:-** உண்மையில அந்தச் சிங்களப் பேராசிரியர் கூறியது சரிதான். எதுக்கும் பொறுத்திருந்து பார்க்கலாம்.


இவ்வாறு வாத்தியார் கூறும் போது மூப்பர் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார்.

இதனை அவதானித்த சாத்திரியார் சதாசிவம்; என்ன மூப்பர் கடுமையாக யோசிக்கிறியள். என்ன சங்கதி.

**மூப்பர்:-** யாழ்ப்பாணத்தில இருக்கிறவர்கள் யோசிக்காமல் இருக்க முடியுமோ!

இப்ப கொஞ்சக் காலமாக எரிபொருள் நிலையங்களில பெற்றோல் அடிப்பது கடினமான விடயமாக இருக்குது.

அதிலும் யாழ்ப்பாண நகரத்தில இருக்கிற பெற்றோல் செற்றில இரவு நேரத்தில பெற்றோல் அடிக்க முடிவதில்லை.



## காற்றாடி வசதி இல்லாத தனியார் கல்வி நிறுவனங்கள்

பெற்றோல் முடிந்து விட்டது என்ற பதிலோட அந்த எரிபொருள் நிலையங்கள் தங்கட பாடு.

நேற்று இரவும் ஓர் அன்பர் யாழ்ப்பாண நகர மையத்தில உள்ள ஒரு எரிபொருள் நிலையத்தில பெற்றோல் அடிக்கப் போயிருக்கிறார்.

ஆனால் அந்த எரிபொருள் நிலையத்தில இருந்த ஓர் இளைஞர்; பெற்றோல் இல்லை என்று கூறிவிட, சம்பந்தப்பட்ட நபர் பக்கதில உள்ள எரிபொருள் நிலையத்தில பெற்றோல் அடிச்சிருக்கிறார்.

எனவே இது விடயத்தில எங்கட பெற்றோலியக் கூட்டுஸ்தாபனம் உரிய நடவடிக்கை எடுக்க வேணும்.

இவ்வாறு மூப்பர் கூறியதும் அதனை ஆலடி மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

இதன்போது அவசரப்பட்ட சிறாப்பர் கனகசபை; பெற்றோலியக் கூட்டுஸ்தாபனம் மட்டுமல்ல, அந்தந்த அமைப்புகள் தத்தம் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களை ஒவ்வொரு விடயத்திலும் மேற்பார்வை செய்வது கட்டாயம்.

இந்தாப்பாருங்க இப்ப வெய்யில் கொடுமை தாங்க முடியல்ல. அதிலும் தனியார் கல்வி நிறுவனங்களில படிக்கிற பிள்ளைகள் கொடும் வெய்யிலால மிகவும் கஷ்ரப்படுகினம்.

குறிப்பாக தனியார் வகுப்புகளில காற்றாடி (Fan) வசதி இல்லாத காரணத்தால அந்த மாணவர்கள் புழுங்கிப் போகினம்.

எனினும் அவர்களால தனியார் கல்வி நிறுவனங்களோட கதைக்க முடியல்ல. பெற்றோர்களும் அது பற்றிப் பேசாதிருக்கினம்.

அதேநேரம் தனியார் கல்வி நிறுவனங்களும் அந்தப் பிள்ளைகளின்ர அவலத்தைப் புரிந்து கொண்டு காற்றாடி வசதிகளைச் செய்து கொடுக்கலாம்.

ஆனால் அவர்களும் அதைச் செய்வதற்குத் தயாரில்லை. இந் நிலையில சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகள், அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும் மேற்பார்வை செய்து உரிய வசதிகளை வழங்குவதற்கு வழிப்படுத்த வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி

"ஆளுநருக்கு ஒரு அவசர மடல்" வலம்புரி ஆசிரியர் எழுதிய கடிதம் சரியானது. இப்போது பிரச்சினை முடிந்து விட்டதா வியாசரே?







இந்த நாடு சிங்கள மக்களுக்குரியது என்ற வாசகம் அடங்கிய சுற்றுலா பேருந்து பற்றி?

**மதுவன் மீசாலை**

**இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டும் உரித்துடையதா வியாசரே?**

**சி**ங்களவர்களால் உருவாக்கப்பட்ட இலங்கையின் தேசியக்கொடி, இலங்கையில் வாழும் மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலேயே உருவாக்கப்பட்டது.

ஆயினும் இப்போது இது சிங்கள பௌத்த நாடு என்று கூறிக் கொள்வதற்குள் இருக்கும் வன்ம புத்தியை என்னவென்று கூறிவிட முடியும்.

இவ்வாறான சொற்பதங்கள் இன ரீதியான பிரிவினையினையே ஏற்படுத்தும் என்பதை முதலில் புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்படி இல்லை என்று அடம்பிடித்தால் அடுத்த சண்டை எழுவதை எவராலும் தடுக்க முடியாது.

**கணேஸ் பருத்தித்துறை**

**இந்த நாடு சிங்கள மக்களுக்குரியது என்ற வாசகம் அடங்கிய சுற்றுலா பேருந்து பற்றி?**

**வெ**ளிநாட்டு சுற்றுலாப்பயணி ஒருவருக்கு, ஒரு கொத்து ரொட்டியின் விலை 1900 ரூபா என கூறிய கடை உரிமையாளர் மற்றும் உதவியாளர், சம்பவம் நடந்து சற்று நேரத்திலேயே தேடி கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்தவர்களுக்கு இவ்வாறு இன வன்மத்தைக் கக்குபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தெரியாதது ஏன் என்ற கேள்வி எழுகிறதல்லவா?

இங்கே தான் ஒரு உண்மை புலப்படுகிறது. ஆம், பெரும்பாண்மையாளர்களில் சிலரின் மனங்களில் இது சிங்கள-பௌத்த நாடு என்ற எண்ணம் சகதியாய் பெருகிக் கிடக்கிறது.

இந்த சகதியை வாரி இறைக்காமல் இலங்கையில் சுதந்திரம் மலராது.
பொருளாதாரத்தில் தன்நிறைவும் பெறாது.

**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**டனுஷாந் ராசா திருநெல்வேலி**

**"ஆளுநருக்கு ஒரு அவசர மடல்" வலம்புரி ஆசிரியர் எழுதிய கடிதம் சரியானது. இப்போது பிரச்சினை முடிந்து விட்டதா வியாசரே?**

**மு**டியவில்லை. அடங்கியிருக்கிறது. ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் என்பது மிகவும் இன்றி அமையாத ஒன்று.

அப்பத்திரிகையின் நடுவுநிலை எப்படி இருக்கிறது என்பதை ஆசிரிய தலையங்கத்தை வைத்து நாடி பிடித்து பார்த்து விட முடியும்.

அவ்வாறான சிறப்பைப் பெற்றது வலம்புரியின் ஆசிரிய தலையங்கம்.

இந் நிலையில் வலம்புரி ஆசிரியருக்கு எதி ராக நடவடிக்கை எடுத்து, அவரின் குரல் வளையை நசிப்பதினூடாக ஊடக சுதந் திரத்திற்கு அச்சுறுத்தல் விடுவதை ஏற் றுக்கொள்ளவே முடியாது.

சிறு கொசுவைத் தட்டுவது போல ஊடகங்களைத் தட்டி விடலாம் என்ற எண்ணத்தை நிறுத்தி, மக்கள் சேவையை மும்முரமாக செய்யுங்கள். இதுவே காலத்தின் தேவை.

**விஜயதரன் உரும்பிராய்**

**ஈரான் ஜனாதிபதியின் இலங்கை வருகையும் அமெரிக்க ஆய்வுக்கப்பலுக்கு அனுமதி மறுப்பும் எப்படியான இராஜ தந்திரம் வியாசரே?**

**இ**லங்கை அமெரிக்காவின் கழுகுப் பார்வைக்குள் சிக்கிவிட்டதை இராஜதந்திரம் என்று சொல்வது முட்டாள்தனமல்லவா?
உலகத்தின் பஞ்சாயத்துத் தலைவரை இலங்கை எதிர்த்திருக்கிறது. இந்த எதிர்ப்பிற்கு இலங்கை பதில் சொல்லியே ஆக வேண்டும்.
அட, அடுத்த ஐ.நா அமர்வில் இலங்கையை அமெரிக்கா வைத்துச் செய்யும் என்பது மட்டும் உண்மை.
போர் குற்ற மீறல் என்ற துரும்புச் சீட்டை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா மீண்டும் கையில் எடுக்கும். இலங்கையின் கழுத்தை இறுக்கும்.
இது சர்வ நிச்சயம்.

**ஜெயமோகன் கொக்குவில்**

**தற்போதைய சமூகத்தில் குடும்பங்களின் சிதைவுக்கான காரணம் என்ன வியாசரே?**

**அ**டுத்தவரைப் பார்த்து நாம் அப்படி வாழ வேண்டும் என்ற எண்ணம் எப்போது எம்மில் தொற்றிக் கொண்டதோ அன்றைக்கே எமது குடும்பக் கட்டமைப்புக்கள் சீரழியத் தொடங்கி விட்டன.
ஆம், அயல்வீட்டின் அடுப்பில் என்ன எரிகிறது என்ற பார்வை எம் சமூகத்தை ஆட்டிப் படைக்கின்றது.
சுய அறிவு இல்லை. சுய உழைப்பு இல்லை. சுய சிந்தனை இல்லை. சுயமாய் செயற்படுவதும் இல்லை.
இவ்வாறு போனால் குடும்பங்கள் சிதைந்து போகாமல் சேர்ந்து போகுமா சொல்லுங்கள்.

**மகாலட்சுமி கொக்குவில்**

**கடவுள் ஏன் மனிதனைப் படைத்தான் வியாசரே கூறமுடியுமா?**

"**க**டவுள் ஒரு நாள் உலகைக் காண தனியே வந்தாராம். கண்ணில் கண்ட மனிதரை எல்லாம் நலமா என்றாராம். ஒரு மனிதன் அதுவே இனிமை என்றான். ஒரு மனிதன் அதுவோ கொடுமை என்றான். படைத்தவனோ உடனே சிரித்துவிட்டான்."
இது ஒரு சினிமா பாடலின் வரி. ஆயினும் இதில்தான் மனிதனை கடவுள் ஏன் படைத்தான் என்பதற்கான பொருள் இருக்கிறது.
கடவுள் தான் சிரிப்பதற்காகவே மனிதனைப் படைத்தான் என்பதே அந்த உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: நான் ஏன் பிறந்தேன்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் வாலி
இசை: சங்கர் கணேஷ்



நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்
இசை வெள்ளம் நதியாக ஓடும் அதில்
இளநெஞ்சம் படகாக ஆடும்
நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்
இசை வெள்ளம் நதியாக ஓடும் அதில்
இளநெஞ்சம் படகாக ஆடும்

தாழம்பூவில் காணும் பொன்வண்ணம்
நாளும் வாழும் தோகைப்பூங்கன்னம்
தாழம்பூவில் காணும் பொன்வண்ணம்
நாளும் வாழும் தோகைப்பூங்கன்னம்
எங்கே நானென்று தேடட்டும் என்னை?
சிந்தாத முத்தங்கள் சிந்த
எங்கே நானென்று தேடட்டும் என்னை
சிந்தாத முத்தங்கள் சிந்த
அவள் என்தன் மனமேடை தவழ்கின்ற பனி வாடை
அவள் என்தன் மனமேடை தவழ்கின்ற பனி வாடை
காலம் கொண்டாடும் கவிதை மகள்
கவிதை மகள்

நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்
இசை வெள்ளம் நதியாக ஓடும் அதில்
இளநெஞ்சம் படகாக ஆடும்

நாதத்தோடு கீதம் உண்டாக
தாளத்தோடு பாதம் தள்ளாட
நாதத்தோடு கீதம் உண்டாக
தாளத்தோடு பாதம் தள்ளாட
வந்தால் பாடும் என் தமிழுக்குப் பெருமை
வாராதிருந்தாலோ தனிமை
வந்தால் பாடும் என் தமிழுக்குப் பெருமை
வாராதிருந்தாலோ தனிமை
நிழல் போலும் குழலாட தளிர்மேனி எழுந்தாட
நிழல் போலும் குழலாட தளிர்மேனி எழுந்தாட
அழகே உன் பின்னால் அன்னம் வரும்
அன்னம் வரும்

நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்
இசை வெள்ளம் நதியாக ஓடும் அதில்
இளநெஞ்சம் படகாக ஆடும்

# பதறிய காரியம் சிதறியே போகும்!

நம்மில் பலரும் ஒருத்தரைப் பற்றி நாமாகவே முன்கூட்டியே முடிவெடுக்கிற மனப்பான்மையுடன் திகழ்கிறோம். அதனாலேயே பல மனச் சிக்கல்கள், உறவுச் சிக்கல்களுக்கு ஆளாகிவிடுகிறோம்.

நான்கு நகரங்கள் இருந்தன. ஒவ்வொரு நகரத்திலும் மக்கள் கொலைப் பட்டினி கிடந்தார்கள். ஒவ்வொரு நகரத்திலும் ஒரு மூட்டை விதை நெல் இருந்தது. முதல் நகரத்தில் விதை என்றால் என்ன, அதை எப்படிப் பயிரிடுவது என்று யாருக்கும் தெரியவில்லை. அதனால் பட்டினியாகவே கிடந்தார்கள்.

அடுத்த நகரத்தில் ஒருவனுக்கு எப்படி விதைப்பதென்று தெரியும். ஆனால், என்ன காரணத்துக்காகவோ அவன் அதைச் செய்யவில்லை. ஆகவே, அந்தக் கிராமத்தவர்களும் பட்டினி கிடந்தார்கள்.

மூன்றாவது ஊரில் ஒருவனுக்குப் பயிரிடத் தெரிந்திருந்தது. "இதைப் பயிரிடுகிறேன். அதற்கு பதிலாக என்னை உங்கள் அரசனாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றான், அவன். கிராமத்தாரும் ஒப்புக்கொண்டனர். விதை நெல் பயிரானது. அங்கு எல்லோரும் சாப்பிட்டார்கள். ஆனால், பயிரிட்டவனுக்கு அடிமைகளாக இருந்தார்கள்.

நான்காவது ஊரில் ஒருவனுக்குப் பயிரிடத் தெரிந்திருந்தது. அதைப் பிறருக்கும் சொல்லிக் கொடுத்தான். எல்லோரும் சாப்பிட்டார்கள். எல்லோரும் சுதந்திரமாக இருந்தார்கள்.

எல்லோரும் வாழவேண்டும் என்ற எண்ணம்தான் உலகை என்றும் முழுமையான மகிழ்ச்சியில் வைத்திருக்கும். நிறைவான இன்பத்தையும் அது தரும். தன்னைப் பற்றி மட்டுமே சிந்தித்துக்கொண்டிருக்கும் மனிதர்களுக்கு நிம்மதியோ, வெற்றியோ எப்போதும் கிடைக்காது. வேடிக்கையான கதை ஒன்று உண்டு.

ஓர் ஊரில் கடும் வறட்சி ஏற்பட்டது. 'இறைவனுக்குப் பாலபிஷேகம் செய்தால் ஊர் செழிக்கும்!' என்று ஊர்ச்சபை கூடி முடிவு செய்தது. சுவாமி அபிஷேகத்துக்காக ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பால் கொண்டு வருவது என்று தீர்மானித்தனர்.

அதன்படி கோயில் மைதானத்தில் மூடப்பட்ட பெரிய அண்டா ஒன்று வைக்கப்பட்டது. ஊர் மக்கள் கொண்டு வரும் பாலை அதில் ஊற்ற ஏற்பாடானது. பால் ஊற்ற ஏதுவாக சிறு திறப்பு மட்டும் இருந்தது. பொதுமக்கள் வரிசையில் நின்று, அந்த அண்டாவில் பால் ஊற்றிச் சென்றனர்.

அபிஷேக நேரம் நெருங்கியது. அண்டாவைத் திறந்து பார்த்த கோயில் பிரமுகர்கள் அதிர்ச்சியடைந்தனர். காரணம், அண்டா முழுவதும் பாலுக்குப் பதில் தண்ணீரே நிரம்பியிருந்தது!

'எல்லோரும் பால் ஊற்றுவார்கள். நாம் மட்டும் தண்ணீர் ஊற்றினால் தெரியவா போகிறது!' என்ற எண்ணத்தில் ஊரார் ஒவ்வொருவரும் தண்ணீர் ஊற்றிச் சென்றதன் விளைவு இது!

கடவுள் விடயத்திலேயே இப்படியென்றால், சகமனிதர்களது விடயத்தில் எப்படி நடந்து கொள்வார்கள்?

ஒரு புத்திசாலி இளைஞர் பயணத்தில் இருந்தார். எதிரில் ஓடி வந்த ஒருவரை நிறுத்திய இளைஞர், "ஐயா! ஏன் இப்படி ஓடுகிறீர்கள்?" எனக் கேட்டார்.

"தம்பி! வழியில் எனது ஒட்டகத்தை ஒரு மரத்தில் கட்டி வைத்துவிட்டுத் தூங்கினேன். அதைக் காணோம். நீ பார்த்தாயா?"

"உங்கள் ஒட்டகத்தின் வலக் கண் குருடா?"

"அதுவேதான்... எங்கே பார்த்தாய், சொல்!"

"உன் ஒட்டகத்துக்கு இரண்டு பற்கள் இருக்காது. சரியா?"

"சந்தேகமே இல்லை. எனது ஒட்டகம்தான். சீக்கிரம் சொல்!"

"வழியில் சில அடையாளங்களைப் பார்த்தேன். அதை வைத்துச் சொன்னேன். மற்றபடி உங்கள் ஒட்டகத்தை நான் பார்க்கவில்லை" என்றார் இளைஞர். ஒட்டகக்காரர் நம்பவில்லை. இளைஞர்தான் ஒட்டகத்தைத் திருடி மறைத்து வைத்துக்கொண்டு ஏமாற்றுகிறார் என்று தவறாகப் புரிந்துகொண்டார். இளைஞரை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று, அருகிலுள்ள கிராமத்தில் உள்ள நீதி சபையில் நிறுத்தினார்.

"நீதிபதி அவர்களே! எனது ஒட்டகத்தைக் காணவில்லை. அதன் அடையாளங்களை இவன் சரியாகச் சொல்கிறான். கேட்டால், தெரியாது என்கிறான். விசாரியுங்கள்!" என்று புகார் கூறினார்.

இளைஞனோ ஐயா, இவரது ஒட்டகத்தை நான் பார்க்கவில்லை. வழியில் பார்த்த சில அடையாளங்களை வைத்து, இவரது ஒட்டகத்துக்கு வலக்கண் குருடு, இரண்டு பற்கள் கிடையாது என்றேன்!" என்றார்.

"இவன் பொய் சொல்கிறான்!" எனக் கத்தினார் ஒட்டகக்காரர்.

இளைஞர் தொடர்ந்தார், "நீதிபதி அவர்களே! இன்னோர் அடையாளமும் உண்டு. இவரது ஒட்டகத்தின் மீது ஒரு பக்கம் சர்க்கரையும், அடுத்த பக்கம் கோதுமையும் இருந்திருக்க வேண்டும்!" என்றார்.


நீதிபதி வியந்தார். ஒட்டகத்தைப் பார்க்கவில்லை எனில், அதன் அங்க அடையாளங்களை, சுமக்கும் சுமைகளைப் பற்றி எப்படி இவ்வளவு துல்லியமாகச் சொல்ல முடியும்?" என்று கேட்டார்.

'ஐயா, நான் வரும் வழியில் இடப் பக்கத்தில் இருந்த செடிகள் எல்லாம் மேயப்பட்டிருந்தன. அதனால் ஒட்டகத்துக்கு வலக் கண் குருடு என்றும், அப்படி மேய்ந்த இடங்களில் நடுநடுவே சில இலைகள் முழுமையாக இருந்ததால், ஒட்டகத்துக்கு இரண்டு பற்கள் இல்லை என்றும் அறிந்தேன்.


அதேபோல், வழியில் ஒரு பக்கம் சர்க்கரை சிதறிக் கிடந்தது. எறும்புகள் அதை மொய்த்துக்கொண்டிருந்தன. அடுத்த பக்கம் கோதுமை சிதறியிருந்தது. பறவைகள் அதைக் கொத்தித் தின்றுகொண்டிருந்தன. அதனால் ஒட்டகத்தின் சுமைப்பொருட்கள் சர்க்கரை, கோதுமை என்று கணிக்க முடிந்தது!" என்றார்.

நீதிபதி பிரமித்தார். ஒட்டகக்காரர் மேற்கொண்டு எதுவும் வாதாட இயலாமல் அங்கிருந்து அகன்றார்.

இப்படித்தான், நம்மில் பலரும் ஒருத்தரைப் பற்றி நாமாகவே முன்கூட்டியே முடிவெடுக்கிற மனப்பான்மையுடன் திகழ்கிறோம். அதனாலேயே பல மனச் சிக்கல்கள், உறவுச் சிக்கல்களுக்கு ஆளாகிவிடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளித்திரைகளின் அடிமைகளா நம் குழந்தைகள்?

“பதினாறு வயதுக்குட்பட்டவர்களுக்கு செல்போன் விற்கக் கூடாது” என்ற சட்டம் கொண்டு வருவது குறித்து பிரிட்டிஷ் அரசு தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறது. பிரிட்டனில் 12 வயதான பெரும்பாலான குழந்தைகள் தங்களுக்கென தனியாக செல்போன் வைத்திருக்கின்றனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் 14 வயதுக்குக் கீழே உள்ளவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். அமெரிக்கக் குழந்தைகள் ஒரு நாளுக்கு சுமார் ஐந்து மணி நேரமாவது யூடியூப், டிக்டொக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களில் செலவிடுகிறார்கள். இந்தியாவிலும் இதுபோல சட்டக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதற்கான நேரம் வந்துவிட்டது என்கிறார்கள் பலரும்!

பிரான்ஸில் 2018ஆம் ஆண்டிலேயே பள்ளிகளில் செல்போன் பயன்படுத்தத் தடைவிதித்து விட்டார்கள். நெதர்லாந்து இந்த ஆண்டு முதல் பள்ளிகளுக்கு மாணவர்கள் ஸ்மார்ட்போன் எடுத்துச் செல்லத் தடை விதித்திருக்கிறது. பின்லாந்தும் இதேபோன்ற சட்டத்தை இயற்றியிருக்கிறது.

சீனாவில் எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளுக்கு அதிகபட்சம் 40 நிமிடங்கள்தான் தங்கள் ஸ்மார்ட்போனைப் பயன்படுத்தலாம். 8 முதல் 16 வயது வரை தினமும் அதிகபட்சம் 1 மணி நேரமும், 16, 17 வயது என்றால் அதிகபட்சம் 2 மணி நேரமும் மட்டுமே பயன்படுத்தலாம்.

எதனால் பல நாடுகளும் பதறுகின்றன? செல்போன்களால், குறிப்பாக ஸ்மார்ட் போன்களால் பல நன்மைகள் உண்டு. எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பெற்றோர்கள் தொடர்பு கொள்ளலாம் என்பதால் அவை குழந்தைகளுக்கு ஒரு விதத்தில் பாதுகாப்பு அளிக்கிறது. செல்போனில் கல்வி ஆப்களைப் பயன்படுத்தி அறிவை வளர்த்துக்கொள்ளலாம். சமூக வலைத்தளங்களில் அதிக நண்பர்களைப் பெறுவதால் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. தங்களுக்கு விருப்பமான இசை, வீடியோக்கேம் போன்றவற்றை அனுபவிக்க முடிவதால் அவர்கள் மனம் உற்சாகம் அடைகிறது.

ஆனால், மறுபக்கம் மோசமானது. இணையத்தை எளிதில் தொடர்புகொள்ள முடிகிறது என்பதால் அதில் வந்து விழும் அத்தனையும் அவர்கள் பார்வையை எட்டுகின்றன. மிக அதிகமான வன்முறை, மதவெறுப்பு, நெருக்கமான பாலியல் காட்சிகள் என்று எவற்றையெல்லாம் குழந்தைகள் தவிர்க்க வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புவார்களோ அவற்றையெல்லாம் தடையின்றிக் காட்சிப்படுத்துகின்றன. செல்போன் மூலமாக அணுகக் கூடிய சமூக ஊடகங்கள்.

குழந்தைகள் வியர்வை சிந்தி விளையாடும் போது உடல் நலம் பெறும். மன இறுக்கம் குறையும். நட்பு பெருகும். மாறாக, தினமும் நீண்ட நேரத்துக்கு செல்போன் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதால், மூளையின் செயற்திறன் குறைந்துவிடுகிறது. வீடியோ கேம்களோடு ஒன்றிப்போகும்போது ஒரே இடத்தில் ஒரே நிலையில் உட்கார்ந்துகொண்டு ஆடுவதால் தசைகளும் மூட்டுகளும் பாதிப்படைகின்றன. ஒரு சின்ன ஒளிர்திரையைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதால் கண் தசைகளும் கண் நரம்புகளும் பலவீனமடைகின்றன. வன்மம் நிறைந்த வீடியோ விளையாட்டுகளில் கண்ணுக்கு தெரியாத எதிரியோடு மோதும்போது ரத்த அழுத்தம் கூடுகிறது. மாறி மாறி பொத்தானை வெகுவேகமாக இயக்கும்போது விரல்களுக்கும் பாதிப்பு உண்டாகிறது. இப்படி உச்சி முதல் உள்ளங்கால் வரை பாதிப்புகள் தொடர்கதை ஆகின்றன.

தொடர்ந்து ஒரு மணி நேரம் செல்போனை பயன்படுத்தக்கூடாது என்றால் கூட குழந்தைகளின் மனநலம் பாதிக்கப்படுகிறது. தங்கள் குழந்தைகள் செல்போன்களுக்கு அடிமைகளாகவே ஆகி வருவதைக் கண்டு கவலைப்பட்ட பிரிட்டனைச் சேர்ந்த சில பெற்றோர்கள், Smartphone-Free Childhood என்ற குழுவை இன்ஸ்டாகிராமில் தொடங்க, அதில் 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.

தங்கள் குழந்தைகளை செல்போன் ராட்சசனிடமிருந்து எப்படிக் காப்பாற்றுவது என்பது குறித்து அவர்கள் அலசிக் கொண்டிருக்கிறார்கள்.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கை, வாழ்வியல் திறனைக் கைக்கொள்ள சில அடிப்படைகளைப் பரிந்துரைக்கிறது. கிரியேட்டிவிட்டி, பிறர் கோணத்திலிருந்து ஒன்றைப் புரிந்து கொள்ளுதல், மன இறுக்கத்தைச் சரியாக நிர்வகித்தல், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், தகவல்தொடர்பு, சக மனிதர்களோடு நல்லுறவு, தன்னை நிலைநிறுத்திக் கொள்ளுதல் போன்றவை அவற்றில் உண்டு. தினமும் அதிக நேரம் ஸ்மார்ட்போனில் மூழ்கி விடுபவர்களுக்கு இவை எல்லாமே பாதிக்கப்படும்.

அதனால்தான் பல நாடுகளும், கொஞ்சம் தாமதமாக உணர்ந்துகொண்டாலும், சில தீவிர கட்டுப்பாடுகளைக் குழந்தைகளின் செல்போன் மற்றும் சமூக ஊடகப் பயன்பாடுகளின்மீது விதிக்கத் தொடங்கியுள்ளன. தேர்ந்த மனநல மருத்துவர்களின் ஆலோசனையுடன் பெற்றோர், ஆசிரியர், அரசு ஆகிய முத்தரப்பினரும் அதிக கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது.

ஒரு தேசத்தின் வெற்றி என்பதில் அதன் இளைய தலைமுறையின் உடல்நலம் மற்றும் மனநலத்துக்கு மிக முக்கியப் பங்கு உண்டு. அவர்களை ஒளிர்திரைகளின் அடிமைகளாக வைத்திருக்கக் கூடாது.

# தர்ப்பூசணி அதிகமா சாப்பிட்டால்!


இந்தக் கோடை காலம் நம்மை நீரேற்றமாக வைத்திருப்பது முக்கியம். தண்ணீர் அதிகமாக குடிப்பது நீரேற்றமாக இருக்க சிறந்த வழியாக இருந்தாலும், நீர்ச்சத்து நிறைந்த பழங்களை எடுத்துக்கொள்வது இன்னும் சிறந்தது. குறிப்பாக சீசன் பழமான தர்ப்பூசணி போன்ற பழங்களை சாப்பிடுவதும் நல்லது.

இந்தப் பழம் நம் உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கும். மேலும் இதில் 92 சதவீதம் தண்ணீர் இருப்பதால், உடலில் உள்ள நீர் இழப்பை நிரப்பி, நம்மை நீரேற்றமாக வைத்திருக்கும்.

தர்ப்பூசணியில் லைகோபீன், ஒக்ஸிஜனேற்றிகள், விற்றமின் ஏ, விற்றமின் சி, பொட்டாசியம் மற்றும் அமினோ அமிலங்கள் நிறைந்துள்ளன.

**வயிற்றுப்போக்கு**

தர்ப்பூசணியில் தண்ணீர் மற்றும் இயற்கை சர்க்கரைகள், குறிப்பாக பிரக்டோஸ் அதிகம் உள்ளது. அதிக அளவு தர்ப்பூசணியை உட்கொள்வது இரைப்பை, குடல் கோளாறு மற்றும் வயிற்றுப் போக்கை ஏற்படுத்தக்கூடும்.



**இரத்த சர்க்கரை**

தர்ப்பூசணியில் இயற்கையாகவே சர்க்கரைகள் உள்ளன. இதனை அதிக அளவில் உட்கொள்ளும் போது இரத்தத்தின் சர்க்கரை அளவு விரைவாக அதிகரிக்கக்கூடும். குறிப்பாக நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இந்த விளைவு அதிகமாக இருக்கலாம்.

**செரிமானப்பிரச்சினை**

தர்ப்பூசணியினை அதிகமாக உட்கொண்டால் அதில் இருக்கும் நீர் மற்றும் நார்ச்சத்து காரணமாக வீக்கம், வாயு மற்றும் வயிற்று அசௌகரியம் ஏற்படலாம்.

**ஒவ்வாமை**

இது அரிதாக இருந்தாலும், சிலருக்கு தர்ப்பூசணி ஒவ்வாமையை ஏற்படுத்தும். அரிப்பு மற்றும் படை நோய் போன்ற லேசான அறிகுறிகளிலிருந்து சுவாசிப்பதில் சிரமம், அனாபிலாக்ஸிஸ் போன்ற கடுமையான எதிர்வினைகள் வரை ஏற்படுத்தலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## தோற்றுப் போனவன் நான்!

காரணமில்லாமல் காகிதங்களைத்
தட்டிக் கொண்டிருக்கின்றேன்
சுருண்டு கிடக்கும் வாடிய இலைகளை
வைத்த கண் வாங்காமல்
பார்த்துக் கொண்டிருக்கின்றேன்
சுழல் காற்றில் சுற்றி வரும் புழுதியை
நுரையீரலை நிறைத்து சுவாசிக்கிறேன்
தூரத்தில் எங்கோ ஊளையிடும்
ஓநாயின் ஒலியை
நுணுக நுகர்ந்து கொண்டிருக்கிறேன்
என்னைக் கடந்து செல்லும்
பாதசாரிகளின் பாதத் தடங்களை
வெறி கொண்டு பார்த்து ரசிக்கிறேன்
வேதனையின் தடங்களை
நெஞ்சில் தடவி உணர்ந்து கொள்கிறேன்!
நிதானமிழந்த பார்வையும்
நேர் தவறிய வார்த்தைகளும்
நினைவிழந்த மூளைக்குள்
குண்டூசிகளை பாய்ச்சுகின்றன...
ஏன் எனும் கேள்வி எழுவதற்குள்
தோற்றுப் போனவன் நீ என்று,
ஆயிரம் குரல்கள் ஆள் மனதில்!
ஆயினும்; மீழ்வேன்... வாழ்வேன்... வெல்வேன்...
என்ற நம்பிக்கைத் துளிகள்
இடப்பக்கத்து இதயத் துளைக்குள்
இறுக பீச்சியடிக்கிறது லப் டப் என...

மாவை. நா. கஜேந்திரன்

## பழைய காலமும் இளையோர் கோலமும்

பழைய காலத்தை நினைத்தால் மனசு
பசுமை உலகில் பறக்கிறது
பாட்டி தந்த பலகாரங்கள் நம்
வாயில் நீரைச் சுரக்கிறது
பனை வளர்த்துப் பயனைப் பெற்றோர்
எமது முன்னோர் என அறிவாய்
பனையைத் தறித்து அழிவை உண்டாக்கும்
இளைய தலைமுறையை எண்ணிப்பார்
ஓலைக்குடிசையில் வாழ்ந்த சுகத்தை
ஓட்டு வீடுகளில் கண்டாரா?
பாட்டி தரும் பழந்தண்ணி சுவையை
பைக்கற் பாலில் உண்டாரா?
வளர்ந்த மருத்துவம் வயிற்றை
குறுக்கே வெட்டி எடுக்கும் நிலை இப்போ
காய்ச்சல் வந்தால் கசாயம் தருவார்
கடுகியே நோய்கள் பறந்தோடும்
காய்ச்சல் எதுவென்றறிந்திடவே- இன்று
நாட்கள் நீண்டு சென்று விடும்!
சொல்லிக்கொண்டே போகலாம்
நம் முன்னோர் சுகத்திற்கீடேது
சல்லிக் காசுக்கடிபடும் இந்த
சந்ததி ஒரு சாபக்கேடு



துணவியூர் நடா.

## மௌனத்தின் தேடல்-714



### அன்புள்ள அம்மா

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்
எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க
அவனைச் சிறித்துக் கொஞ்சி மகிழ்வது போல்
நல் அறிவாளனாக்கி தன்னுயிர் போல்
மன்னுயிரையும் பண்புடன் மதித்து வாழ
வழிகாட்டி விடுதலே
சிறந்த ஓர் அன்னையின் குறிக்கோள்

சி. மகாலட்சுமி,
கொக்குவில்.

### குழந்தையின் கோரிக்கை

அன்பிலே அன்னை திரேசாவாகிடு
பாட்டிலே கவி பாரதியாகிடு
வீரத்திலே நெப்போலியன் பேரெடு
கொடுப்பதில் கர்ணன் பேரை காத்திடு
இத்தனையும் என்னால்
இயன்றவரை செய்வேன் அம்மா!
சித்தி வீட்டில் என்னை
சேர்த்து விடாதே!
அம்மா???

ம. தனுசியன்,
தரம் 06, யா/வட்டு மத்திய கல்லூரி.

### மனநலம்

குழந்தையும் தெய்வமும்
குணத்தால் ஒன்றென்பது
தங்குதடை ஏதுமின்றி
இங்கு உண்மையாகின்றது
உண்மை அன்பைக் கொடுத்து
தெள்ளிய பேறும் செயலிது
வாய் விட்டுச் சிரித்தால்
நோய் விட்டுப் போகுமென்றும்
மனநல மருத்துவத்திற்குமிது
மகத்தான மருந்தாகின்றது

க. நாகராசா, நுணாவில்.

### தளிரின் தலைபிற்காய்.

தன் உயிரைக் கொடுத்து
உருவாக்கிய தளிரின்
தளைப்பிற்காய்
தினம் தினம் தனை உருக்கி வார்த்து
பூரிப்படையும்
அன்னையின் அன்புக்கு
ஈடாக ஏதும் உண்டா இவ்வுலகில்

சு. சிவராணி, சுன்னாகம்.

### கொள்ளையழகு

நான் உன்னை முத்தமிடும் – வேளையில்
என் சித்தமெங்கும் உந்தன் சிந்தனை
தத்தித் தவழுதடா – உன்
கன்னக்குழி சிரிப்பில் – என்
கஷ்டங்கள் காணாமல் போகுதடா
எத்தனை கோடி
அள்ளித் தந்தாலும் – உன்
கொள்ளையழகை யாராலும்
கொட்டித்தர முடியாதடா!

ஆ. லக்ஷ்மி, வவுனியா.

### பெண்ணின் பெருமை

பத்துத் திங்கள் கருவறையில் சுமந்து
பக்குவமாய் பத்தியமும் காத்து
பதினாறு பேறுகளில் சிறந்த பேறான
மகப் பேற்றை பெற்று
மாதாவை மாண்புறச் செய்த மழலையே
பெண்ணின் பெருமை தனை உலகுக்கு
பறைசாற்றும் தாய்மை எனும் பெயரை சூடவைத்து
மகிழ்ந்து உறவாடி உள்ளம் பூரிக்கவைத்த சேயே
கரங்களால் கட்டியணைத்து முத்தமிடும் வேளையில்
கடவுளுக்கு நன்றி சொல்கின்றது என் பெண்ணியல்

ஆ. செல்வி, திருநாவலூர்.

## மௌனத்தின் தேடல்- 715



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். / எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




இவர்களைவிட 5 அடிமைச் சேவகர்கள் பணிவான வர, 2 கேடயக்காரர் ஒருவர் மாறி ஒருவர் ஒலிவேறாவுக்குக் குடை பிடித்து வருவர். அவனது பவனியை முன்கூட்டியே அறிவிப்பன போன்று மூன்று தவிலடிப்போர் தமது மேளங்களைத் தட்டியவாறு நடப்பர். 1627 மார்ச் 22 ஆம் திகதி பிலிப் தே ஒலிவேறா தனது 23 ஆம் வயதில் மரணமடைந்தான். அவன் சடலம் அற்புதமாதா கோயிற் படிகளுக்கருகில் அடக்கம் செய்யப்பட்டது. அவனுக்குப் பின் யாழ்ப்பாத்தின் கப்பித்தான் மேஜராக லாங்றோட் தே செயிக்ஸாஸ் காபிறேரா என்பவன் பதவியேற்றான்.

### 1629 ஆம் ஆண்டு நடுக் கூறு

கண்டி இராச்சியத்தின் மன்னனாக விளங்கிய செனரத் என்பவன், போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்திலிருந்து துரத்திவிட்டு, யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றும் நோக்குடன் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிடுமாறு படையொன்றினை அனுப்பிவைத்தான்.

கண்டி அத்தப்பத்து முதலியாரின் தலைமையில் 10 ஆயிரம் வீரரைக் கொண்ட படையணி யாழ்ப்பாணம் நோக்கி வந்தது. அதற்குதவியாகத் தஞ்சாவூர் அரசனின் வடக்கர் படையொன்றும் யாழ்ப்பாணம் நோக்கி வந்து.

மணவினைத் தொடர்பால், யாழ்ப்பாணத்தின் ஆட்சியுரிமை தனக்குரியதென கண்டி மன்னன் செனரத் நம்பினான். பிலிப் தே ஒலிவேறா யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி கடைசி மன்னன் சங்கிலியனைச் சிறைப்பிடித்துக் கோவாவுக்கு அனுப்பிவைத்தான். அரச குடும்பத்தைச் சேர்ந்த பலரைக் கத்தோலிக்காராகினான். மூன்று அரசகுமாரத்திகளில் ஒருத்தி, டொனா கதறினா என்ற ஞானஸ்தானப் பெயருடன் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டாள். வேறிரு அரசகுமாரிகளை சின்னமிகாப்பிள்ளை என்பான் தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்று அங்கு அடைக்கலம் பெற்றுக் கொடுத்தான்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரின் பொறுப்பிலிருந்த கதரீனா இளவரசியைத் தனது மகனுக்கு மணம் முடித்து வைக்குமாறு செனரத் மன்னன் தூதனுப்பி வைத்தான். பிலிப்தே ஒலிவேறா அவனது கோரிக்கையை மறுத்துவிட்டான். ஆனால் செனரத், தஞ்சாவூர் மன்னரிடம் அடைக்கலம் புகுந்திருந்த யாழ்ப்பாணத்து இளவரசிகள் இருவரையும் வரவழைத்துத் தன்னிரு மக்களுக்கும் மணம் முடித்துவைத்தான். எனவே யாழ்ப்பாண அரசாட்சி உரிமை தனக்கு உரியது என கண்டி மன்னன் அறை கூவி படை அனுப்பி வைத்தான்.

(தொடரும்...)

# கடல் புறா

## வணங்காத தலை! இணங்காத குரல்!




எதிரே வாயை பிளந்து கொண்டு பிரமித்து நின்ற கொள்ளையர் இனி எந்த காரணத்தை முன்னிட்டு இளைய நல்லவனுக்கு எதிராக திருப்ப மாடடார்கள் என்பதை தனது ஒரே பார்வையால் தீர்மானித்துக் கொண்ட பலவர்மன் தார் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்டு விட்டால் இளையவல்லவன் தனது பிடியில் சிக்குவதற்கு பதில் தான் இளையவல்லவன் பிடியில் சிக்க வேண்டி இருக்கு என்பதை சந்தேகமற புரிந்து கொண்டார்.

மிதிப் பெட்டிகளை கொண்டு வந்ததற்கு மாளிகை வாயில் அந்த கூட்டத்திற்கு முன்னால் அவற்றை இளையவல்லவர் திறந்து காட்டியதற்கும் காரணம் கொள்ளையரையும் நகரத்தாரையும் பிரமிக்க அடித்து தன் வயப்படுத்திக் கொள்ளவே என்பதை பலவர்மன் உணர்ந்து கொண்டான்.

முதல் நாள் நாட்டி யத்திற்கு முன்பாக சீலைகளையும் ஆபரணங்களையும் கொள்ளையருக்கும் அவர்கள் துணைவிகளுக்கும் பரிசளித்ததிலிருந்து அவனிடம் பெரும் பிரமைகொண்டிருந்த கொள்ளையர், நாட்டியத்திற்குப் பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளாலும் பூர்வக் குடிகளிடமுள்ள கிலியாலும் சிறிது மாறுபட்டிருந்தாலும் மஞ்சளழகியும் இளையபல்லவனும் தனித்திருந்ததைச் சுட்டிக்காட்டி, படைத்தலைவன் நடத்தையிலும் உண்மை எண்ணத்திலும் அவர்களுக்குத் தான் சற்று சந்தேகத்தை விளைவித்திருந்தாலும் அந்தக் கிலி சந்தேகம் அனைத்தும் பணத்தைக் கண்ட மாத்திரத்தில் பறந்து விட்டதெனபது அவர்களின் முக பாவத்தில் தெள்ளென விளங்கியதையும் கண்டான் பலவர்மன்.

அப்படிக் கண்டதால் தன் செல்வாக்கு பெரிதும் மங்கிவிட்டதையும் இளையபல்லவன் மதிப்பு அவர்களிடம் ஓங்கிவிட்டதையும் புரிந்து கொண்டு மனிதர்களை மாற்றுவதில் செல்வத்துக்குள்ள திறமையைக் கண்டு உள்ளூர வியக்கவும் செய்தான். அந்த வியப்பை மேலும் உயர்த்த இளையபல்லவன் பலவர்மனை நோக்கி கோட்டையின் காவலரே! அகூதாவிடம் ஓராண்டு உப தலைவனாயிருந்த நான் சம்பாதித்த செல்வம் இது. சரியாக மதிப்பீடு செய்பவர்கள் மட்டும் இங்கிருந்தால் இதைக் கொண்டு ஒரு பெரும் அரசை விலைக்கு வாங்கலாமென்பதை உணர்த்துவார்கள்.

அப்படி மதிப்பீடு செய்ய இங்கு யாருமில்லையென்றால் இதோ இரக்கம் எங்கள் நாட்டுக் கூல வாணிகன் சேந்தன் அவற்றின் மதிப்பைக் கூறுவான்," என்று சொன்னான். அப்படிச் சொல்லிக்கொண்டே அந்தப் பெட்டிகளில் ஒன்றிலிருந்து ஒரு பெரும் மாணிக்கத்தை எடுத்தத் தன் கட்டைவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் அதைச் சூரிய வெளிச்சத்தில் பளபளக்க விட்டு அது எழுப்பிய செங்கதிர்களை அனைவருக்கும் காட்டிக்கொண்டே "சேந்தா! இந்த மாணிக்கம் என்ன பெறுமான முள்ளது?" என்று வினவினான்.

சேந்தனின் ஆராய்ச்சிக் கண்கள் அந்த மாணிக்கத்தைப் பயபக்தியுடன் பார்த்தன. ஸ்ரீவிஜயத்தின் தங்க நாணயங்களில் ஐயாயிரம் நாணயங்கள் பெறும்" என்றான் அவன் சில விநாடிகளின் ஆராய்ச்சிப் பார்வைக்குப் பிறகு.

இளையபல்லவன் ஏதுா வித்தை காட்டுபவன் போல் அந்தக் கல்லை நாற்புறமும் காட்டிக்கொண்டு கொள்ளையரை நோக்கி, "இதைப்போல் சுமார் ஆயிரம் கற்கள் இந்தப் பெட்டியில் இருக்கின்ற. தவிர ஏராளமான நகைகள் இருக்கின்றன" என்று கூறிவிட்டு மிக அலட்சியமாக அந்த மாணிக்கத்தைப் பெட்டியில் விட்டெறிந்தான்.

பிறகு மற்றொரு பெட்டியைச் சுட்டிக் காட்டி, "இதிலுள்ள தங்கப்பாத்திரங்களை ஸ்ரீவிஜய நகரத்தின் கடைத்தெருவில் வெளி நாட்டவருக்கு விலை கூறினால் கிடைக்கும் பணத்தைக்கொண்டு அக்ஷயமுனைக் கோட்டையைக் காக்க இப்பொழுது இருப்பதுபோல் இரண்டு மடங்கு படையைத் திரட்டலாம்.

ஆனால் அது என் உத்தேசமல்ல.." என்று மேலும் ஏதோ இருக்கிறதென்பதை ஊகத் துக்கு விட்டுப் பேச்சைப் பாதியில் நிறுத்தினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘நித்திலம் தொகுத்து வழங்கும்’

# சுகமான விடியல்

398

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இயற்கை என்ற இனிய வைத்தியன்

இயற்கையை இறைவனாகச் சித்தரித்து வழிபடும் மரபு அன்று தொட்டு இருந்துவருகின்றது. அந்த இயற்கை என்ற இறைவன் வைத்தியத்திலே விற்பன்னனாக இருப்பதால் அந்த இறைவனுக்கு வைத்தீஸ்வரன் என்றும் ஒரு பெயர் இருக்கிறது. நோய்த்தடுப்புக்கும் நோய் குணமாக்கலுக்கும் அடி நாதமாய் விளங்கும் இயற்கை மூலமாகக் கிடைக்கும் வளங்களை அசட்டைசெய்து செயற்கையான பொருட்களின் கால்களிலே நாம் முற்றாக சரணாகதி அடைந்துகொண்டிருக்கிறோம். அதனால் நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கை செயற்கைத்தனமாகி, இயந்திரமாகி, உணவு வகைகள் கூட பைக்கற்றுகளிலும் பேணிகளிலும் வருகின்ற இரசாயன உணவுகளாக மாறி, பானங்கள் எல்லாம் போத்தலில் வருகின்ற செயற்கை சுவையூட்டிகளின் கலவையாகி, மீசை வெட்டுவதற்குக்கூட மிசின் தேவை என்று ஆகி, எமது உடற்பயிற்சிகள் இயந்திரங்களில் என்று ஆகி, எங்கள் புன்னகைகளும் நன்றி தெரிவிப்புகளும் உதட்டளவில் வரும் செயற்கை உபசாரமாக மாறி, இயற்கையிலிருந்து நாம் அந்நியப்பட்டு சென்றுகொண்டிருக்கிறோம்.


இயற்கையான, சுத்தமான காற்று பல நோய்களை மாற்றும். நுரையீரலைப் பாதுகாத்து பல நோய்களைத் தடுக்கும். காற்றுக்காலம் தொடங்கியதும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவது இதற்கு ஒரு நல்ல சான்று. இயற்கையான காற்றுக்கு கதவடைப்பு செய்து பூட்டிய அறை யினுள் செயற்கை மின்விசிறியை சுற்றவிட்டு, சுற்றி வரும் அசுத்தக் காற்றை சுவாசித்து நோயை விலை கொடுத்து வாங்கும் வில்லங்க வாழ்வு அரங்கேறிக்கொண்டிருப்பது ஏன்?

சாதாரண தடிமன், காய்ச்சல், தலையிடி, தசைப்பிடிப்பு, வயிற்றுக்குழப்பம் போன்றவை மருந்துகள் எதுவுமின்றி இயற்கையாக மாறக்கூடியவை. சிறு சிறு அறிகுறிகளுக்கெல்லாம் மருந்து பாவிக்க நினைப்பது நல்லதல்ல. அவற்றை தானாக மாறவிடுவது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது. பூப்பறிப்பதற்கு ஏன் கோடாரியைத் தூக்கவேண்டும்? இயற்கையில் மாறக்கூடிய நோய்களுக்கு ஏன் மாத்திரைகளைக் கையில் எடுக்கவேண்டும்?

இயற்கையை இரசிக்கும் பழக்கம் பல நோய்களைத் தீர்க்கவும் தடுக்கவும் வல்லது. பச்சைப் புற்தரையை, பஞ்சுபோன்ற முகில்களை, வீசும் காற்றை, விடிகாலைப் பொழுதை, பள்ளிசெல்லும் சிறார்களை, பறக்கும் குருவிகளை, பாட்டனின் பழங்கதையை, பாட்டியின் புறுபுறுப்பை, மலரும் பூக்களை என இரசிப்பதற்கு எத்தனையோ இருக்கின்றன. இந்தப் பழக்கம் மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தைத் தரும். மனதில் ஏற்பட்ட காயங்கள் பலவற்றை காலம் தானாக மாற்றி விடுவதை நாம் அன்றாட வாழ்வில் அவதானித்திருக்கிறோம்.

கலப்படமற்ற இயற்கையான உணவுவகைகள், நோயைத்தடுக்கவும், நோயைத் தீர்க்கவும் வல்லவை. ஊர்க்கோழி முட்டை, இளநீர், இயற்கையான உணவு உண்ணும் பசுவினுடைய பால், மோர், பச்சையிலை உண்ணும் ஆட்டின் பால், இயற்கை உரமிட்டு மருந்து தெளிக்காமல் வளர்க்கப்பட்ட மரக்கறி வகைகள், ஊர்க்கோழி இறைச்சி, இயற்கையாக வளரும் அகத்தி, சண்டி, முருங்கை, தவசி முருங்கை போன்றவற்றின் இலைவகைகள், வாழைப்பொத்தி, தானாகப் பழுத்த பழவகைகள், கடலிலே பிடித்த உடன் மீன்வகைகள், இறால், தேசிக்காய், சுண்டங்கத்தரி என எத்தனை இனிமையான, இயற்கையான, இலகுவில் கிடைக்கக் கூடிய உணவு வகைகள் எம்மத்தியில் உள்ளன. இருந்தும் சத்துமாப்பேணிகளுக்கும் இரசாயன உணவுகளுக்கும் நாம் ஆசைப்படுவதன் காரணம் என்ன? சூரிய பகவான் எமக்கு சக்தியை மட்டும் கொடுக்கவில்லை. பல நோய்க் கிருமிகளிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துவருகின்றான். அன்றாட பாவனைப்பொருட்களான தலையணை, பாய், மெத்தை போன்றவற்றை சூரிய வெயிலில் காயவிடுவதன் மூலம் பல ஆபத்தான கிருமி களை இயற்கையான முறையில் அழித்து விட முடியும். இயற் கையாகப் பொழியும் மழை நீரைச் சேகரித்து அருந்திவரு வது ஆரோக்கியத்துக்கு நல்லது மட்டுமல்ல, புற்றுநோய்கள் மற் றும் சிறுநீரக நோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கும்.

பூட்டிய அறையினுள்ளேயும், வீட்டினுள்ளேயும் இரும்பு இயந்திரங்களில் ஏறி உடற்பயிற்சி செய்வதிலும் பார்க்க இயற்கையுடன் ஒன்றி வீட்டுத்தோட்டமோ விலங்கு விவசாயமோ செய்வதிலும், பயணங்களுக்கு சைக்கிள்களைப் பயன்படுத்துவதிலும், நடந்து செல்வதிலும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வதன் மூலமும், எமது அன்றாட தேவைகளை நாமே செய்வதன் மூலமும் நாம் செய்யும் உடற்பயிற்சியை பயன் மிக்கதாகவும் மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கக்கூடியதாகவும் மாற்றிக் கொள்ளலாம்.



இயற்கைக்கும் சில சமயம் இயலாமல் போகலாம். சில நோய்த்தடுப்புகளுக்கும் நோய் குணமாக்கல்களுக்கும் இயற்கையான நடைமுறைகள் மட்டும் போதாமல் போகலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் மட்டும் செய ற்கை என்ற ஆயுதத்தைத் தூக்கு வோம். மொத்தத்தில் செயற்கைத் தனத்தின் கால்களில் சரணாகதி ஆகாமல் செயற்கையை சாதுரி யமாகப் பயன்படுத்த முயல் வோம். இயற்கை என்ற இனிய வைத்தியனின் கவனிப்பிலே சுகம்பெறுவோம்.

**சி.சிவன்சுதன்,**
**வைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா**
**வைத்தியசாலை.**

# வாழ்வை வசந்தமாக்குவோம்

நோயற்று வாழ்வது எப்படி? நோயுற்றும் சுகமாக வாழ்வது எப்படி? என்றெல்லாம் தெரிந்து வைத்திருப்பதும் ஒரு கலைதான்.

கடுமையான நோய்நிலைகளிலே பெரும்பாலானவை மனிதனின் கவனக்குறைவினாலும் போதியளவு மருத்துவ அறிவு இல்லாததனாலுமே ஏற்படுகின்றன. எனவே, நாம் மருத்துவம் சம்பந்தமான தகவல்களை அறிவதில் அதிகம் ஆர்வம்காட்டவேண்டும். அதற்கமைய எமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள முயலவேண்டும். எதனையும் வருமுன் காப்பதற்கு முயற்சிப்போம். அதனை யும் மீறி வருபவை எமது கைகளில் இல்லை. அதை ஏற்றுக்கொள்ள முயலுவோம்.

எமது சிறார்களுக்கு சுகம் சம்பந்தமான அறிவைச் சிறுவயதிலே புகட்டுவோம். தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தையும் உடல் நிறையைப் பேணும் பழக்கத்தையும் சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

அது அவர்களின் எதிர்கால வாழ்க்கை வசந்தமாவதற்கு உறுதுணையாக நிற்கும். எமது எதிர்காலத் தூண்கள் உறுதிபெறும். நல்ல சிந்தனைகளை வளர்ப்போம். தீய பழக்கங்களை ஒழிப்போம். வாழ்வை வசந்தமாக்குவோம்.

**சி.சிவன்சுதன், வைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பத்தின் உச்சம்; தீப்பற்றிய கைத்தொலைபேசி



(கொழும்பு)

ஹொரணை பகுதியில் காரின் முன் பகுதியில் வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசி வெடித்துச் சிதறி தீப்பற்றியுள்ளது.

சூரிய ஒளி நேரடியாக படும் இடத்தில் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், அதிக வெப்பத்தால் குறித்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, கடும் வெப்பம் நிலவும் காலப்பகுதியில் வெட்ட வெளியில் வாகனத்தை நிறுத்தி கைத்தொலைபேசியை உள்ளே வைத்து விட்டு வெளியேற வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஙி-6)

# கஞ்சாவை சட்டமாக்குங்கள் அரசிடம் தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

கஞ்சாவை சட்டபூர்வமாக்குவதற்கு முன்னுரிமை வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாக ஜனசேத பெரமுனவின் தலைவர்பத்தர முல்லை சௌரதன தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத்திடம் முறையான கோரிக்கையை முன்வைக்க எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கஞ்சா சோதனைகள் தேவையற்றது என்று கூறிய அவர், இலங்கையில் மதுபானங்கள் இல்லாத காலகட்டத்தில் சாமானியர்கள் கூட கஞ்சாவை பயன்படுத்தியதாக தெரிவித்தார்

கஞ்சா பயன்பாடு சிறப்பான உத்வேகத்தையும் வலிமையையும் தருவதுடன் இனத்தின் வளர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

இதேவேளை யுக்திய என்ற பெயரில் பொலிஸார் போதைப் பொருள் பாவனையாளர்கள் மற்றும் அதனை விநியோகம் செய்பவர்களை தேடி கைது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 100 | 100-150 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 200 | 155 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 80 | 60 | 70-90 | 100 |
| தக்காளி | 160 | 120 | 100 | 100-160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 120 | 100-120 | 160 |
| கோவா | 100 | 180 | 150 | 150 | 200 |
| கரட் | 100 | 230 | 200 | 200 | 300 |
| பூசணி | 100 | 120 | 140 | 80 | 80 |
| புடோல் | 100 | 200 | 200 | 100 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 350 | 120 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 350 | 200 | 300 |
| பாகற்காய் | 600 | 400 | 300 | 200 | 300 |
| வெண்டக்காய் | 100 | 150 | 150 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | -- | 200 |
| பயற்றங்காய் | 160 | 200 | 180 | 200-250 | 100 |
| லீக்ஸ் | 250 | 250 | 220 | 220 | 300 |
| பீற்றூட் | 160 | 200 | 150 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 150 | 150 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 800 | 300-700 | 600 |
| போஞ்சி | 250 | 350 | 300 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-70 | 100 |
| தேசிக்காய் | 1000 | 800 | 800 | 800-1200 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 100 | 50-90 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 60 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 | -- |

# இன்று ஒரு தகவல் 114



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பாவத்தில் பங்கு

முன்னொரு காலத்தில் ரத்னாகர் என்று ஒரு ஆள் இருந்தான்.நல்ல குடும்பத்தில் பிறந்தவன் தான். இருந்தாலும் சகவாசம் சரியில்லை. வேடர்கள் சிலருடன் சேர்ந்து கொண்டு அடிக்கடி எங்கேயாவது போய்க் கொள்ளையடிக்கின்றான். அதுவே அவனுக்கு எப்பொழுதும் தொழிலாகப் போய்விட்டது.

ஒரு சமயம் சப்த ரிசிகள் அவன் இருந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் இவனுக்கு உள்ளங்கை அரிக்க ஆரம்பித்துவிட்டது. சும்மா இருக்க முடியவில்லை. அவர்கள் அசந்து இருந்த சமயம் பார்த்து ஏதாவது இருந்தால் கிளப்பிக் கொண்டு வரலாம் என்று போனான்.

ஆனால் அவர்கள் அதனைப் புரிந்து கொண்டார்கள். " எங்களிடம் எந்தப் பொருளும் கிடையாதே. எதைக் கொள்ளையடிக்கப் போகின்றாய்'' என்று கேட்டார்கள்.அவன் திருதிரு என்று முழித்தான்.அது சரி, ஏன் இந்தப் பாவத்தை செய்கிறாய் என்று கேட்டார்கள்.

"என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக பாவம் செய்கின்றேன்.செய்தால் என்ன. அதிலே ஐந்தில் ஒரு பாகம் தான் எனக்கு வரப் போகின்றது '' என்றான். இவர்களுக்கு சரியாகப் புரியவில்லை."ஐந்திலே ஒரு பாகமா? அது எப்படி என்று கேட்டார்கள். எனது குடும்பத்தில் என்னையும் சேர்த்து மொத்தம் ஐந்து பேர். அவர்களுக்காகவும் தான் நான் திருடுகின்றேன். அதனால் நான் செய்வது பாவம் என்றால் அதில் ஐந்தில் ஒரு பாகம் தான் என்னைச் சேரும் என்றான் அவன்

"அப்படியா! சரி !! நாங்கள் எல்லோரும் இங்கேயே இருக்கின்றோம். நீ இப்பொழுது நேராக உங்க வீட்டுக்குப் போ! உங்கள் குடும்பத்திலே உள்ளவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டுவிட்டு வா.!'' என்றார்கள் சப்த ரிஷிகள். "என்ன கேட்க வேண்டும்? சொல்லுங்கள்.'' என்றான் இவன். நீ செய்யுற பாவத்தையும் அவர்கள் பங்கு போட்டு எடுத்துக்கொள்வார்களா? என்று கேட்டுக் கொண்டு வா.! '' என்றார்கள். ரத்தினாகர் சரி என்று சொல்லி விட்டு நேராக வீட்டுக்குப் போனான்.

முதலில் தந்தையைப் பார்த்தான். அப்பா! நான் கொள்ளையடித்துக் கொண்டு வருகின்ற பொருளிலே பங்கு எடுக்குறீர்களே! நான் செய்யும் பாவத்தில் உங்களுக்கு பங்கு உண்டா? என்று கேட்டான். அது எப்படி முடியும்? என்னைக் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய கடமை. அதனால் நீ கொண்டு வரும் பொருளில் தான் எனக்கு பங்கு உண்டு. பாவத்தில் பங்கு கிடையாது என்று சொன்னார் அப்பா.' சரி என்று சொல்லிவிட்டு அவர் அம்மாவிடம் போனார். இதே கேள்வியைக் கேட்டான். அவர்களும் அப்பா சொன்ன பதிலையே சொன்னார்கள். அடுத்த படியாக இவன் அவனது மனைவியிடம் போய்க் கேட்டான். அந்த அம்மாவும் அதே பதிலைத்தான் சொன்னார். கடைசியாக மகனிடம் போய்க் கேட்டான்.அவன் மட்டுமென்ன? அதே பதில் தான். ஆகக் கூடி எல்லோரும் சொன்னது என்ன வென்றால்.

" எங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கின்றது. அது உன்னுடைய கடமை. அதனால் நீ கொண்டு வரும் பொருளிலே நாங்கள் பங்கு எடுப்பது தப்பில்லை! ஆனால் நீ செய்யும் பாவத்தில் எங்களுக்கு சம்பந்தம் இல்லை. அதிலே எங்களுக்கு பங்கும் இல்லை. இது தான் இவர்கள் சொன்னது.!

பையன் யோசித்துப் பார்த்தான். அவனுக்கு மிகவும் பாவமாகிப் போய்விட்டது. 'இதுவரைக்கும் நிறையப்பாவத்தைச் சேர்த்துவிட்டேன். இனிமேல் எப்படி கடைத்தேறப் போகின்றேன் என்று நினைத்துப் பார்த்தான். ஒன்றுமே புரியவில்லையே! நேராக ஓடிப்போய் அந்த ரிஷிகள் காலிலே விழுந்தான். " நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்றான். அவர்கள் அவனுக்கு ராமநாமத்தை உபதேசம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து ஜெபிக்கும் படியாகவும் சொன்னார்கள். ரத்னாகர் அதை உடனே செய்ய ஆரம்பித்தார். வேறு ஞாபகமே இல்லாமல் ராம நாமத்தையே ஜெபித்துக் கொண்டு இருந்தான். அவனைச் சுற்றி கறையான் புற்று உண்டாவதைக் கூடக் கவனிக்கவில்லை. அந்த ரத்னாகர் யார் என்று நினைக்கின்றீர்கள்? அது தான் வால்மீகி. இராமாயணம் என்கின்ற அற்புதக் காவியத்தை நமக்குத் தந்த வால்மீகி தான் அந்த ரத்னாகர்.

இந்தக் கதையைக் கேட்டு, " நானும் வால்மீகி போல் ஆகப் போகின்றேன். என்று சொல்லிக் கொண்டு யாரும் கறையான் புற்றுக்குள் போய் உட்கார்ந்து விடாதீர்கள். பாவத்தை எப்படிப் பங்கு போடுவது என்றும் யோசித்து விடாதீர்கள். இந்த காலத்திலேயும் " ரத்னாகர் ''மாதிரியொரு ஆள் இருந்தான். அவனுக்கு இன்னொரு சிநேகிதன் அவனை மாதிரியே.

இரண்டு பேரும் வேறு வேறு இடத்திற்கு திருடப் போவது. எது கிடைத்தாலும் ஆளுக்கு பாதி பங்கு பிரித்து எடுக்கிறது. இது தான் அவர்களது பழக்கம்.


ஒரு அமாவாசை அன்றைக்கு இரண்டு பேரும் இரண்டு பக்கமாகப் போனார்கள் அவர்கள் தொழிலைக் கவனிக்க. மறுநாள் காலையில் திரும்பி வந்து ஒரு தனியிடத்தில் சந்தித்தார்கள். கிடைத்ததிலே ஆளுக்கு பாதிப் பங்கு போட ஆரம்பித்தார்கள்.ஒருவன் தனக்கு 800 ரூபா கிடைத்தாகச் சொல்லி அதிலே சரிபாதி 400 ரூபாவை அடுத்தவனுக்குக் கொடுத்தான். இவன் எழுந்து அவனை ஒரு மரத்தில கட்டி வைத்து சாட்டையாலே 15 சவுக்கடி கொடுத்தான். அவன் துடித்துப் போய் ஏன் இப்படிப் செய்கிறாய்? என்றான்.

இதற்கு அவன் நேற்றைக்கு நான் போன இடத்தில் மாட்டிக் கொண்டேன். எனக்கு முப்பது சவுக்கடி கிடைத்தது. அது தான் பாதியை உன்னிடம் கொடுத்தேன்! என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## கடற்கரை மணலில் காயங்களையும் நன்மைகளையும் கற்பாறைகளில் எழுதப்பழகுவோம்



பைபிளில் யோவான் நற்செய்தியில் 15:09-17 இல் இருந்து எடுக்கப்படும் பகுதி இன்று எமக்குத் தரப்படுகின்றது. அப்பகுதி இயேசுவோடு ஒருவர் கொண்டுள்ள உறவை இரண்டு வடிவங்களில் காட்டுகின்றது எனலாம்: **'பணியாளர்'-'நண்பர்'**. எம் விசுவாசப் பயணத்தில் இந்த வடிவத்தில் ஏதாவது ஒன்று முன்னிலைபெறும். அது **தலைவன்-பணியாளர்** உறவு அல்லது **நண்பர் - நண்பர்** உறவாகும். இங்கு இயேசு நம்மோடு நண்பனாக இருக்கவே ஆசைப்படுவதை பார்க்கின்றோம்: 'இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன்'. உறவின் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது நட்பு. நண்பர்கள்தான் ஒவ்வொருடைய வாழ்க்கையையும் செதுக்கும் சிற்பிகள் என பார்கள். நட்பின் சிறப்பை உணர்ந்த 'இயேசு, தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை' என்றார். தன்னைக் காட்டிக் கொடுத்தவரையும் 'தோழா, எதற்காக வந்தாய்?' என்ற இயேசுவின் உயிரை உறைய வைத்த அந்த வார்த்தைகள் பகைவனையும் பதற வைத்து விட்டன. இயேசு, பகையைக்கூட நட்பாக மாற்ற வேண்டும். இருக்கின்ற நட்பை, உயிரைக் கொடுத்தேனும் வளர்க்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

ஆனால் சிலவேளைகளில் எங்கள் வாழ்க்கையை உருக்குலைப்பதும் நண்பர்களே. கவிஞன் ஒருவன்: இறைவா, என் பகைவனை நான் பார்த்துக் கொள்கிறேன். நண்பனிடமிருந்து என்னை நீ காப்பாற்று என்று கதறியதையும் கேட்டிருக்கின்றோம். உயிரை வாங்குகின்ற நட்பு பல மாறுவேடங்களில் அலைவதைப் பார்க்கின்றோம். சுயநலம் என்ற போர்வையில், பணம், பதவி ஆசையில் காட்டிக் கொடுக்கும் துரோகங்கள் நட்பில் நடந்தேறுகின்றன. அத்துடன் நயவஞ்சகம் காட்டி நண்பனை கொலை செய்வோரையும் நாம் இன்று காண்கின்றோம்.

இந்த இடத்தில் ஒருமுறை நான் நட்புப்பற்றி வாசித்த ஒரு கதையை சொல்லித்தான் ஆகவேண்டும்: இரண்டு நண்பர்கள் பாலைவனத்திற்கூடாகப் பயணித்துக் கொண்டிருந்தனர். பாதி வழியில் இருவருக்குமிடையில் வாக்குவாதம் பலமாகி செல்ல திடிரென ஒருவர் மற்றவரது கன்னத்தில் பளாரென அறைந்தார். அப்பொழுது தாக்கப்பட்டவர்: 'இன்று எனது உற்ற நண்பன் எனது கன்னத்தில் அறைந்துவிட்டான்' என்று மணலில் எழுதினார். பின்னர் இருவரும் பாலைவனத்தில் நீர் பகுதியை காணும்வரை தொடர்ந்து நடந்து சென்றனர். இறுதியில் நீர் பகுதிக்குள் இறங்கி குளித்துக் கொண்டிருக்கும்போது அடிவேண்டியவர் சேத்துக்குள் திடிரென மூழ்கத்தொடங்கினார். உடனே அறைந்தவர் அவரை மிகுந்த கஷ்டத்துடன் இழுத்தெடுத்து காப்பாற்றினார். அப்போது 'இன்று எனது உற்ற நண்பன் எனது உயிரை காப்பாற்றினார்' என்று எழுதினார். இதையும் கண்ணுற்ற அறைந்த நண்பன் 'நான் உன்னை காயப்படுத்தியபோது மணலில் எழுதினாய். இப்பொழுது கற்பாறையில் எழுதினாய். இது ஏன் என வினாவினர்". அதற்கு மற்றவர்கள் எம்மை காயப்படுத்தும்போது நாம் மணலில் எழுத வேண்டும். அதனை மன்னிப்பு என்னும் காற்று அங்கே தடயமில்லாது அழித்து விடும். ஆனால் மற்றவர்கள் எமக்கு நன்மை செய்யும்போது கற்பாறையில் செதுக்கிவிட வேண்டும் அதனை எந்தப் புயல்காற்றும் அழித்துவிடாது என்று பதில் கூறினார். மன்னித்து ஏற்கும் பண்பும் நட்பின் அடையாளம்தானே. நாம் இயேசுவைக் காயப்படுத்தும் போதெல்லாம் அரவணைத்திட நம்மைத்தேடி வந்துகொண்டே இருக்கிறார். தேடி வரும் இயேசுவை நாம் நாடிச் செல்லும்போது அங்கே நட்பும் அன்பும் உருவாகும். பாசக் கயிற்றினால் நாம் பிணைக்கப்படுவோம்.

தலைவன் - பணியாளர் உறவை முன்னிலைப்படுத்துவோர் இயேசுவின் முன்பு தகுதியற்றவர்கள் என்று கூறுகின்றனர். இதற்குத் தான் இயேசு 'நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்' என்கின்றார். நமது கிறிஸ்தவ வாழ்வும், பணியும், இறைவன் தந்திருக்கின்ற தனிப்பட்ட அழைப்பு. எனவே, இறைவனுக்கு நன்றியுள்ளவர்களாய் வாழக் கடமைப்பட்டிருக்கின்றோம். அத்துடன், இறுதிப்பகுதியில் எதற்காக இறைவன் நம்மை அழைத்திருக்கிறார் என்பதையும் சிந்திக்கவும் இன்றைய பைபிள் பகுதி அழைக்கிறது. 'நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்'. இறைவன் நம்மைத் தேர்ந்து கொண்டதன் நோக்கம். நாம் பிறருக்குப் பயனுள்ள வகையில் கனி தர வேண்டும் என்பதற்காகவே. எனவே நேர்மையோடு, பிறருக்குப் பயன்தரும் வகையில் நாம் வாழ்வோம். பகைவரை கூட நண்பனாக மாற்றுவோம்.

**ம.பிரான்சிஸ்க் -**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**


# ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancies:

**Teacher - Engineering Technology - A/L**
**Computer Hardware Technician**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post, to reach us before 17th May 2024 to the address below.

Please mention the post you are applying for on the top left hand corner of the envelope.

Only shortlisted candidates will be called for an interview.

**The Principal,**
**St.John's College,**
**Jaffna.**

(c-0271)


# வருடாந்த பொதுக்கூட்டம், நிர்வாகத் தெரிவு - 2024

அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபை தெரிவும் எதிர்வரும் 19.05.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது இக் கூட்டத்திற்கு கலந்து கொள்ளுமாறும் தங்களின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக்களை நல்கி உதவுமாறும் கேட்டுக் கொள்கின்றோம். அங்கத்தவர்கள் பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 15.05.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அம்பானை மேற்கு சுன்னாகம் எனும் முகவரிக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கூட்டம் நடைபெறும் இடம் : சரஸ்வதி சனசமூக நிலையம், மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு
திகதி : 19.05.2024
நேரம் : காலை 10.00 மணி

அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் (634)


செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில் சகல சௌபாக்கியங்களும் பெற்று தரும் விசேஷ தினத்தில் எங்களுடன் கொண்டாட பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை அகமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

# மயூரன்ஸ் நகைமாளிகை



அட்ஷய திருதியை தினமாகிய 10.05.2024 அன்று சிறப்பு விலைக் கழிவுகளும் பெறுமதிமிக்க பரிசில்களும் உங்களுக்காக காத்திருக்கின்றன என்பதை அறியத் தருவதையிட்டு அகமகிழ்கிறோம்.




(சி-0272)

இல. 07, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 3015, 077 651 0251.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாடசாலை மாணவர்களுக்கு அறத்தைப் போதியுங்கள்

ஒரு காலத்தில் கலைத் திட்டத்தைத் தயாரிப்பதில் அறிஞர் குழாம் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டது.

அதன் காரணமாக மொழி மற்றும் சமய பாடங்களில் அறம் சார்ந்த கருத்துக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன.

ஆனால் சம காலத்தில் பாடத்திட்டத் தயாரிப்பில், தெரிந்தவர்கள் மற்றும் தமக்கு அறிமுகமானவர்களுக்கு இடம்கொடுத்து, அவர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துவதில் மட்டுமே கருசனை காட்டப்படுகிறது.

இதன் காரணமாக தமிழ் மற்றும் சமய பாடப்புத்தகங்கள் ஏனோதானோ என்ற அடிப்படையில் தயாரிக்கப்படுவதைக் காண முடியும்.

இத்தகைய வேண்டா வெறுப்புத்தனங்கள் மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற பரீட்சை வரையில் நீண்டு செல்கின்றன.

உண்மை. கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களை அப்படியே அச்சிட்டு இறுதிப் பரீட்சையாக நடத்துகின்ற அளவில் நம் நிலைமை வந்துவிட்டது.

எனினும் இதுபற்றியெல்லாம் கதைப்பது முரண்பாட்டை ஏற்படுத்துவதாகப் பார்க்கப்படுகின்ற இக்காலத்தில் இனி எதுவும் செய்ய முடியாது என்பதுதான் உண்மை.

இருந்தும் இப்படியே நிலைமை நகருமாயின், எங்கும் அநீதியும் அராஜகமும் அதர்மத்தனங்களும் ஊழல்களுமே தாண்டவமாடும்.

இந்த நிலைமைகளை நாம் பல இடங்களில் அனுபவிக்கின்றோம்.

அதிலும் குறிப்பாக மருத்துவத்துறையில் நம் பொதுமக்கள் அனுபவிக்கின்ற சம்பவங்கள் அறத்தின் வீழ்ச்சியையே சுட்டி நிற்கின்றன.

எனவே அறம் சார்ந்த கருத்துக்களை மாணவர்களிடையே விதைக்க வேண்டும்.

அதற்கேற்றாற்போல் பாடப்புத்தகங்களில் அறம் சார்ந்த கருத்துக்களைப் பிரதிபலிக்கக் கூடியதான விடயதானங்கள் வெளிப்படுத்தப்படுவது அவசியம்.

ஆனால் இது விடயத்தில் நம் பாடவிதான தயாரிப்பாளர்கள் அக்கறை கொள்வதாக இல்லை.

அவர்களைப் பொறுத்தவரை காகம் வடை என்ற கதையை மாற்றி எழுதுவதே மிகப்பெரும் சாதனை எனக் கருதுகின்றனர்.

காகம் வடையை தன் காலில் வைத்துக் கொண்டு கா... கா... எனப் பாடியதாக கதை மாற்றப்பட்டுள்ளது.

ஆனால் பாட்டியிடம் இருந்து காகம் வடையை களவாடிய மூலக்கதையை எவரும் மாற்ற நினைக்கவில்லை.

ஆக, காகம் ஏமாறவில்லை என்ற கருத்தை மாணவர்களுக்குப் புகுத்த நினைத்தபோது, நம் சமூகத்தில் ஏமாற்றுதல் மலிந்து போயிற்று.

உண்மை. காகம் – வடை என்ற அந்தக் கதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கிரேக்க நாட்டுக் கதை.

அந்தக் கதைக்குள் ஒருவர் ஏமாற்றப்படுகின்ற சந்தர்ப்பம் காகத்தினூடாக உணர்த்தப்படுகிறது. அதுவே கதைப்பொருள்.

ஆனால் நம் சமகால அறிஞர்கள் கதையை மாற்றி காகத்தைக் காப்பாற்றினர். ஆனால் சமூகத்தில் ஏமாறுகின்றவர்களைக் காப்பாற்ற முடியாமல் போயிற்று.

ஆக, மாணவர்களுக்கு அறத்தை எடுத்துரைத்தால் மட்டுமே எதிர்காலத்திலேனும் அநீதிகளைக் குறைக்க முடியும்.

# ஐந்தாவது தடவையாக சந்தித்த ஜனாதிபதி ரணில்-பசில் ராஜபக்ஷ

## ஜூனில் இறுதித் தீர்மானமாம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான மற்றுமொரு சந்திப்பு நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இருவருக்கும் இடையிலான ஐந்தாவது சந்திப்பு கொழும்பு மஹகமசேகர மாவத்தையில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது, பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஹரின் பெர்னாண்டோ, டிரான் அலஸ், பிரசன்ன ரணதுங்க மற்றும் கஞ்சன விஜேசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் காலங்களில் எந்த தேர்தலை முதலில் நடத்துவது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டுமென முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அனைத்துக் கட்சிகளிடமும் எழுத்துபூர்வ மாக ஆதரவை கேட்பது சிறந்தது எனவும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதன் போது கருத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கத்தின் பல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானத்தை எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சந்திப்பின்போது தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இலங்கைக்கான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய அமெரிக்கா

(ஜோர்ஜியா)

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக அமெரிக்கா மீண்டும் உறுதியளித்துள்ளது.

அமெரிக்க திறைசேரியின் துணை உதவிச் செயலாளர் ராபர்ட் கப்ரோத் இந்த உறுதியை வழங்கியதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக அண்மையில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ஜோர்ஜியாவுக்கு உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த கூட்டத்தின் பக்க சந்திப்பாக அவர் பல நாடுகளின் முக்கிய தரப்பினரை சந்தித்து வருகிறார். இதற்கமைய, அமெரிக்க திறைசேரியின் துணை உதவிச் செயலாளர் ராபர்ட் கப்ரோத்தை ஷெஹான் சேமசிங்க சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கையின் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பில் ஆழமாக கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு செயல்முறையை. சரிவர கொண்டு செல்வது நிலையான பொருளாதாரத்துக்கு வழிவகுக்கும் எனவும், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பொருளாதார நெருக்கடியை தவிர்க்க உதவுமெனவும் ராபர்ட் கப்ரோத் தெரிவித்தார். (நி-6)

## வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 22, 443 டெங்கு நோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 22,443 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, டெங்கு நோயினால் 9 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், வடக்கு மாகாணத்தில் 4375 பேரும், மத்திய மாகாணத்தில் 1890 பேரும், வடமேற்கு மாகாணத்தில் 1616 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 1855 பேரும், தென் மாகாணத்தில் 1723 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் அதிகளவு டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அதன் எண்ணிக்கை 8071 ஆகும்.(நி- 6)

## போலி வைத்தியர்களை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி மருத்துவ நிலையங்களை நடத்தும் போலி வைத்தியர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் வைத்தியர்களுக்கு வழங்கப்படும் உத்தியோகபூர்வ அடையாளத்துடன் கூடிய ஸ்டிக்கரை வாகனங்களில் ஒட்டி சிலர் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி மருத்துவ நிலையங்களை நடத்துபவர்கள் மற்றும் வைத்தியர்கள் போல் நடித்து,

சில சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு 11.5.2024 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார். என்பதனை பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (ம-7,10)

## மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத்துக்கான மனவளக்கலை பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் க. செல்வகுமார் வழங்குவார்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரு 'ஜோரு'

## குஜராத்தை வீழ்த்தி ஹட்ரிக் வெற்றி



அணித் தலைவர் டுபிளசி அரைச் சதம் விளாச பெங்களூரு அணி 4 விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில் "ஹட்ரிக்" வெற்றி பெற்றது.

பெங்களூரு, சின்னசாமி மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் பெங்களூரு -குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூரு அணித் தலைவர் டுபிளசி களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

**சுப்மன் ஏமாற்றம்**

குஜராத் அணிக்கு சகா (1), அணித் தலைவர் சுப்மன் கில் (2), சாய் சுதர்சன் (6) ஏமாற்றினர். பின் இணைந்த ஷாருக்கான் (37), டேவிட் மில்லர் (30) ஜோடி ஆறுதல் கொடுத்தது. யாஷ் தயால் "சுழலில்" ரஷித் கான் (18), டிவாட்டியா (35) சிக்கினர். வைஷாக் வீசிய கடைசி ஓவரில் மானவ் சுதர் (1), மோகித் சர்மா (0), விஜய் சங்கர் (10) ஆட்டமிழந்தனர்.

19.3 ஓவர்களில் குஜராத் அணி 147 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக் களையும் இழந்தது.

**டுபிளசி அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய பெங்க ளூரு அணிக்கு விராட் ஹோலி, டுபிளசி ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. மோகித் சர்மா வீசிய முதல் ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்டார் ஹோலி. ஜோஷ் லிட்டில் வீசிய 2வது ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த டுபிளசி 18 பந்துகளில் அரைச் சதம் எட்டினார். முதல் விக்கெட்டுக்காக 92 ஓட்டங்கள் சேர்த்தபோது டுபிளசி (64) ஆட்டமிழந்தார்.

**கார்த்திக் கலக்கல்**

வில் ஜாக்ஸ் (1), ரஜத் படிதர் (2), மக்ஸ்வெல் (4), கிரீன் (1) ஏமாற்றினர். கோலி (42) நம்பிக்கை கொடுத்தார்.

பெங்களூரு அணி 117 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. பின் இணைந்த தினேஷ் கார்த்திக், சுவப்னில் சிங் ஜோடி அணியை கரை சேர்த்தது. ரஷித் வீசிய 12வது ஓவரில் 3 பவுண்டரி அடித்தார் கார்த்திக். நூர் அகமட் வீசிய 13ஆவது ஓவரில் 2 பவுண்டரி விரட்டிய சுவப்னில், ரஷித் பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

13.4 ஓவர்களில் பெங்களூரு அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கார்த்திக் (21), சுவப்னில் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (7,10)

**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (665)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union WU MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974**

## UNIVERSITY COLLEGE OF JAFFNA
## UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
*Ministry of Education*

**VACANCY**

Applications are invited from suitable qualified persons for the below mentioned post in university college of Jaffna.

**Assitant Bursar**

**Colosing Date : 05.06.2024**
FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7792

05.05.2024 (c-0272)

**CEO/Director**
**University College of Jaffna**

## Young Men's Christian Association- Jaffna
## Vacancy
## Post of Liaison Officer

YMCA Jaffna is seeking applications for the position of Liaison Officer (Christians Preferred), responsible for supporting the Programme Secretary, as well as providing assistance to the Accounts Clerk and the Executive Officer of the General Secretary. Interested candidates are invited to submit their applications with updated Curriculum Vitae to the Chairman, Human Resource Committee, YMCA, 109 Kandy Road, Jaffna, by 18-05-2024.

**Duties:**

- Act as a bridge between different departments, ensuring effective communication and collaboration.
- Assist in planning and coordinating program activities in alignment with the organization's vision, mission, and Christian values.
- Facilitate meetings and events, maintaining detailed agendas and records.
- Provide administrative support, utilizing technology for operations such as video conferencing and multimedia presentations.
- Collaborate with the Programme Secretary in project proposal writing, record-keeping, and report creation.
- Support the Accounts Clerk in financial transactions, budget tracking, and expenditure management.
- Assist the Executive Officer of the General Secretary in administrative tasks and coordination.

**Qualifications:**

- Diploma in a relevant field preferred, with a minimum of two years of experience in charitable or non-governmental organizations.
- Alternatively, G.C.E. Advanced Level with four years of experience in similar organizations.
- Strong communication skills in Tamil and English, with proficiency in MS Office.
- Ability to work with diverse teams and grassroots-level communities.

**Compensation:**
- Salary: Rs.25,150.00
- Cost of living Allowance: Rs.7,800.00
- Additional Benefits: Medical Reimbursement and staff loan (Conditions applicable)

**Preferred Age:** 22 – 40
**Only shortlisted candidates will be contacted.**
**Join us in making a positive impact! Apply today.**

**Chairman,**
**Human Resource Committee**
(c-0274)

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
1940 . 09 . 13

**மறைவு**
2024 . 05 . 03

## திருமதி புனிதவதி வேலாயுதம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி வேலாயுதம் அவர்கள் கடந்த 03.05.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் மருமகளும் வைத்திலிங்கம் வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும் இரத்தினமலர் (அமரர்), பரிபூரணம் (அமரர்), தனலட்சுமி (அமரர்), அருந்ததி (அமரர்), சந்திரசேகரம் (லண்டன்), தர்மராஜா (அமரர்) மற்றும் இராஜசிங்கம் (அமரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவசீலன் (சிவா -கனடா), சிவமணி (சிவானி - ஆசிரியை கோப்பாய் நாவலர் த.வி) மற்றும் காலஞ்சென்ற சிவபாலன் (பாலா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானதீபன் (உதவி முகாமையாளர் - [பொறி] இ.போ.ச கோண்டாவில்) மற்றும் காயத்திரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சேரலாதன், ருக்ஷனன், சாய்ருத் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2024) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 077 883 7150,
077 968 8261

(662)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் மாடு...

டுள்ளனர்.

நெடுந்தீவு பகுதியில் இருந்து 20 மாடுகளை படகு மூலம், குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு கொண்டு வந்து அங்கிருந்து லொறியில் 20 மாடுகளையும் யாழ்ப்பாணம் ஏற்றி வந்துள்ளார்.

அதில்10 மாடுகளை பண்ணை பகுதியில் இறக்கி அவற்றை விற்பனை செய்த பின்னர் மிகுதி 10 மாடுகளையும் லொறியில் ஏற்றிச் சென்ற வேளை யாழ்ப்பாண பொலிஸாரினால் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் லொறியில் இருந்த 10 மாடுகள் மற்றும் லொறியை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்ற பொலிஸார், கைது செய்யப்பட்ட சாரதியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

லொறி ஒன்றில் 05 மாடுகளையே ஏற்றிச் செல்ல முடியும் எனவும், அவற்றுக்கு மேலதிகமாக ஏற்றி சென்றமையால் விலங்குகளை சித்திரவதைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10,33)

## இரு பிள்ளை...

இரவு குறித்த தாயின் மகள் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்த நிலையில் குறித்த தாய் மற்றும் அவரது மகன் மாத்திரமே சம்பவம் இடம்பெற்ற இல்லத்தில் இருந்த நிலையிலேயே நேற்று காலை இறந்த நிலையில் தாயின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரணதரத்தில் கல்வி கற்கும் குறித்த தாயின் மகன் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரது அறையில் கொலை சம்பந்தப்பட்ட வாசகங்கள் அதிகமாக காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணவிசாரணைகளினை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதோடு மரணத்தில் சந்தேகம் நிலவுவதனால் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## இலங்கையின்...

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முற்பகல் இலங்கை வந்தடைந்த ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிற்பகல் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, கடன் மறுசீரமைப்பிற்கான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பின்னர் இலங்கையின் அபிவிருத்திக்காக யென் கடன் திட்டத்தின் (Yen loans) ஊடாக ஒத்துழைப்பு வழங்குவதாக ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு, பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதனை ஜப்பான் வரவேற்றுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான உடன்படிக்கை எட்டப்பட்டதன் பின்னர் இலங்கையினால் இரு தரப்பு உடன்படிக்கைகளுக்கு செல்ல முடியும் என ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய நல்லிணக்க செயற்பாடுகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் உறுதியளித்தார். (ம-7,10)

## என்னைச்...

சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"என் அரசியல் பயணம் ஆளுந் தரப்பினருக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் என்னைச் சிறையில் அடைக்கச் சகல வழிகளிலும் முயல்கின்றனர். சிறையில் அடைக்கும் அளவுக்கு நான் குற்றம் எதுவும் செய்யவில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் உண்மைத் தகவல்கள் வெளியானால் தங்கள் அரசியலுக்கு வேட்டு வைக்கப்படும் என்று ஆளுந் தரப்பினரான மொட்டுக் கட்சியினர் எண்ணுகின்றனர். அதனால் அவர்கள் எனது அரசியல் பயணத்தை முடக்க முயல்கின்றனர்.

என் அரசியல் பயணத்தை எவராலும் தடுக்க முடியாது. நெருக்கடி நிலைமையிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை விரைவில் மீட்டெடுப்பேன். சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஆட்சி மலரும் காலம் வெகு தொலைவில் இல்லை." என்றார். (ம-7,10)

## ரணில்...

போட்டியிட நாமலுக்கு இன்னும் காலம் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தையில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரை தமது கட்சியின் ஆதரவை கோரவில்லை.

இதன்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்ஷ இன்னும் காலம் காத்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (ம-7,10)

## யாழில் சர்வ...

உலக சிலம்பம், சிவலீமன் சிலம்ப சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் இந்நிகழ்வு, இலங்கை சிவலீமன் சங்கத்தின் தலைவரும் உலக சிவலீமன் சங்கத்தின் இலங்கைத் தலைவருமான யசோதரன் தலைமையில் ஆரம்பமானது.

இலங்கை, இந்தியா, லண்டன், மலேஷியா, டுபாய், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இதில் கலந்து கொண்டு விளையாடி வருகின்றனர்.

சிலம்பம் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டு இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## நீதி...

நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அங்குனுகொல பெலஸ்ஸ, காலி, களுத்துறை ஆகிய இடங்களில் இந்த நீதிமன்ற நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் 60 வீதமாக [illegible] பற்றாக்குறையால் ஏற்படும் சிக்கல்களுக்கு, இந்த திட்டத்தின் ஊடாக தீர்வு பெற்றுக்கொடுக்க முடியு மென நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த அழைத்துச் செல்வதற்கான போக்குவரத்து செலவு பாரிய அளவில் காணப்படுவதோடு, அதற்காக பொதுமக்களின் பணமே பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7,10)

## சிறு குற்றங்...

தெரிவித்தார்.

இது தொடர்பான சட்டமூலம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

சிறு குற்றங்களுக்காக நீண்ட காலம் சிறையில் இருப்பவர்கள் மனரீதியாக பாதிக்கப்படுவதுடன், அவர்கள் சமூகத்தில் பெரும் குற்றவாளிகளாகவே சித்தரிக்கப்படுகின்றனர்.

அவ்வாறான நிலைமையை மாற்றி, சிறு குற்றங்களுக்காக கைது செய்யப்படுபவர்களை சிறையில் அடைக்காமல் வீட்டுக்காவலில் வைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ம-7,10)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து. கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள அரச திணைக்களத்தில் தொழில்புரியும் (HNDIT) மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 864 9878**
**077 634 3103** (653)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதியில் (கோப்பாய் வீதிக்கு மிக அருகாமையில்) 7 பரப்பு 15 குளிக் காணியில் சகல வசதியுடன் கூடிய வீட்டுடன் பல பயன்தரு மரங்கள் உள்ள வருவாயுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**077 412 1657**
**077 732 8583** (650)

## மீசாலையில் இயங்கும் SVIS PHARMACY, SVIS DISTRIBUTORS (PVT) LTD க்கு வேலைக்கு ஆட்கள் தேவை

- ❑ மருந்தக உதவியாளர்
- ❑ விற்பனை உதவியாளர்
- ❑ கணக்கீட்டு உதவியாளர்
- ❑ கொள்முதல் அதிகாரி

மீசாலை, கொடிகாமம், சாவகச்சேரி பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (656)

**077 211 0996, 077 245 4224**

## யாழ் நகரில் Hospitality Management Diploma வகுப்புகள்

- ❑ Restaurant & Bar Management
- ❑ Professional Cookery
- ♦ சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- ♦ வெளிநாட்டு வேலைவாய்ப்பு
- ♦ இலவச ஆங்கில வகுப்புகள்
- ♦ தொழில்சார் அனுபவமுள்ள விரிவுரையாளர்கள்
- ♦ பகுதி நேர வேலை வாய்ப்பு

பதிவுகளுக்கு :
**076 9696 298 / 077 7042 918**
**BRITISH COLLEGE OF HOSPITALITY MANAGEMENT**
275 - 2/1, CLOCK TOWER ROAD, JAFFNA. (639)

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வு வீதியில் 3 1/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
**070 382 4074** (640)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

மீசாலை பகுதியில் உள்ள வீடொன்றில் சமையல் வேலை மற்றும் குழந்தை பராமரிப்பு செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
**077 844 8676** (629)

## யாழ் நகரில் IELTS வகுப்புகள்

- ♦ குறைந்த கட்டணம்
- ♦ British Council Trained Teachers
- ♦ Unlimited hours
- ♦ பயிற்சிக் கையேடு இலவசம்

மேலதிக விபரங்களுக்கு :
**076 9696 298/ 077 7042 918**
**BRITISH COLLEGE OF HOSPITALITY MANAGEMENT**
275 - 2/1, CLOCK TOWER ROAD, JAFFNA. (639)

## CCTV Technician, Electrician மற்றும் அலுவலக முகாமையாளர் தேவை

யாழ் மத்தியில் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் பணி புரிவதற்கு அனுபவமுள்ள CCTV Technician, Electrician மற்றும் அலுவலக முகாமையாளர் (பெண்) தேவை.
**076 989 9977**
**077 868 8517** (649)

## CANADA VISA

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)

**021 222 5686**
**076 424 7111**
**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.

## வேலையாட்கள் தேவை

பளையில் இயங்கும் தும்பு தொழிற்சாலைக்கு தங்கி இருந்து வேலை செய்ய வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
**077 365 6826** (651)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322 / 077 77 19 322 — Visit Visas — Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0280)

## PickMe Taxi சேவை

நீங்கள் வைத்திருக்கும் அனைத்து வகை வாகனங்களையும் PickMe Taxi சேவையில் இலவசமாக இணைத்து அதிக வருமானம் பெறலாம்.
**077 473 7737**
அழைக்கவும். (658)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய் செல்லத்துரை வீதியில் 6 பரப்பு காணி, 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தோட்டம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்தது. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:
**074 010 6595** (642)

## காணி விற்பனைக்கு

மன்னார் - ஆஸ்பத்திரி வீதிக்கு அருகாமையில் செமற்றியன் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:
**077 248 7204** (648)

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து (C-0280)
V2 GUEST 0743900360 / 0743900361

## காணி விற்பனைக்கு

நல்லூர் Temple Road துர்க்கா மணி மண்டபத்தின் அருகில் செல்லும் பாதையூடாக அமைந்துள்ள 4 பரப்பு காணியானது விற்பனைக்கு உண்டு. மேலும் மூத்ததம்பி மடம் அருகிலுள்ள பாதையூடாகவும் செல்லமுடியும்.
**077 229 4985**
**077 621 2039** (631)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
- ◆ 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- ◆ குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- ◆ சுன்னாகம் நகரம் 1 Km
- ◆ ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- ◆ தரகர் தேவையில்லை. (625)

**077 88 62 927**

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், தாவடி, ஒட்டுமடம் பிரதேசங்களில் 2,3 அறைகளுடன் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:
**076 187 9228** (636)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 251/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 185/= | |
| 1 Kg 7 star கோதுமை மா | - 179/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 200 | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 173/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 01 Lux றோஸ் சோப் | - 145/= | ~~175/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |

400g Anchor
990/=

~~1050/=~~

Kotmale Yoghurt

53/= ~~80/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
Happy Supermarket **0777 8080 30** (664)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் இந்து சமய பாட ஆசிரியர் திருமதி பிறேமதேவா மஞ்சுளாதேவி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி முத்துராசா தவமணிதேவி**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (0041)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/சென்மேரிஸ் வித்தியாலயம் (OLR)**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org